

# தமிழரசு

1-2-1990. ரூ. 1.







தோற்றம்:
15.9.1909

பிப்ரவரி - 3
பேரறிஞர் அண்ணா
நினைவு நாள்

மறைவு:
3.2.1969

## இந்த இதழில் ...


உத்தமர் காந்தியார்
—பேரறிஞர் அண்ணா ... 2

எம் அண்ணா இதய மன்னா!
—முதல்வர் கலைஞர் ... 4

தமிழ்நாடு வளம்பெற
புதிய திட்டங்கள்
— சட்டமன்றத்தில் ஆளுநர் உரை ... 9

பயனடைந்தோர் பகர்வன: ... 19

திருவள்ளுவர் திருநாள் ... 24

கோவை மாவட்டத்தில் ... 33

செந்நாப் புலவர் கார்மேகனார் ... 39

உதயசூரியன் நகர் புதிய குடியிருப்புகள்
திறப்பு விழா ... 41

டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுச்
சிறப்பு அஞ்சல் தலை வெளியீடு ... 46





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021
சுக்ல ஆண்டு - தை - 19
மலர் : 20 இதழ் : 15
1-2-1990






# உத்தமர் காந்தியார்

-பேரறிஞர் அண்ணா

"உலகிலேயே படைபலமும் இராசதந்திர பலமும் மிகுந்ததோர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றி காண முடியும் ஆயுத பலமுமின்றி'' - என்ற எந்தத் திட மனதை எந்த உத்தமர் உண்டாக்கினாரோ அவரை - ஏகாதிபத்தியமே பணிந்துவிட்ட நேரத்தில் - எவனோ வெறியன் சுட்டுவிட்டான்! இந்த நாடும் உலகமும் இதனை மறப்பதற்கில்லை!

நமது வாழ்நாளிலே, நாடு விடுதலை பெறக் கண்டோம்! நாம் சாகுமுன், 'ஆங்கில நாட்டுக்கு நாமோர் அடிமை' என்று இருந்த இழிவு நீக்கப்பட்டு - அதனால் நமது மக்களெல்லாம் தலைநிமிர்ந்து நின்று, பூரித்து - 'நமது தலைமுறை மகத்தானது' என்று மார்தட்டிக் கூறினோம்! இன்றோ, 'மகாபாவியினால் மகாத்மா கொல்லப்பட்ட காலத்திலே வாழ்ந்தவர்கள் நாம்' என்ற துக்கம், மனதைப் பிய்த்துத் தின்னுகிறது!

அவருடைய முப்பதாண்டுப் பணியிலே ஒரு கடுமையான சொல் - ஒரு நேர்மையற்ற செயல் - ஒரு சுயநலத் திட்டம் இருந்ததில்லை!

அவருடைய சேவையினால் ஏற்பட்ட செல்வாக்கு இந்தியாவின் ஒளியையும், ஆசியாவின் புகழையும், நிறத் திமிர் கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிலி உண்டாக்கக்கூடிய அளவுக்குப் பரப்பிற்று!

அவருடைய மொழியைக் கேட்க வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தனர்!

அவர் மண் குடிசையிலே தங்கினால், 'அங்கு செல்வது மதிப்பளிக்கக் கூடியது' என்று மன்னர் மன்னர்கள் எண்ணினர்!

அவருடைய மறைவு கேட்டு மாநிலமே துடிதுடித்ததுபோல், வேறு எங்கும் எந்தத் தலைவருக்கும் ஏற்பட்டதில்லை!

புதிய மார்க்கம் துவக்கிய புத்தர் - வீரத்தாலும் பிறகு விவேகத்தாலும் இந்தியாவின் புகழை வளரச் செய்த அசோகன் - பெரிய வல்லரசுகளைக் கட்டியாண்ட மன்னர்கள் ஆகியோர், படித்தவர்களுக்கு மட்டுமே தெரியக்கூடிய நிலை பெற்றனர்!

மகாத்மாவையோ மாநிலம் முழுவதும் - படித்தவர், பாமரர், பாராளுமன்றத்தினர் அனைவரும் அறிந்துகொண்டதுடன், அவர்களின் மனதிலே அவர் இடம் பெற்றார்!

'சத்தியம், அகிம்சை' எனும் இரு தத்துவங்களை நாடுகொள்ள வேண்டுமென்பதை, அவர் எப்போதும் வலியுறுத்தி வந்தார்.

அரசியலிலே மோசடிகளும், படுகொலைகளும் நிகழ்ந்த போதும், அவர் மனம் வேதனைப்பட்டதேயன்றி, அவர் அந்த இரு தத்துவங்களை வலியுறுத்தத் தவறவில்லை! கடைசி வரையில் அந்தக் கொள்கையை அவர் கொண்டிருந்தார். நாடு அந்தக் கொள்கைவழி நிற்கவில்லையே' என்ற எண்ணம் - அவர் மனதிலே கிளப்பிய வேதனைப் புயல் - கொஞ்சமல்ல! கடந்த சில மாதங்களாகவே, இந்த மனவேதனையை அவர் எடுத்துக்கூறி வந்தார்.

எவரும், 'இயலாதது' என்று எண்ணி, போகத் துணிவு பெறாமல் இருக்கும் இடத்திற்குச் சென்று பணியாற்ற அவர் முன்வந்தார்! படுகொலைகள் நடைபெற்ற நவகாளி, கல்கத்தாப் பகுதிகளிலே அவர், கிராமம் கிராமமாக - ஒற்றையடிப் பாதைகளிலே - வயல் வரப்புகளின்மீது - குக்கிராமங்களுக்கெல்லாம் சென்று, நொந்த உள்ளங்களுக்கெல்லாம் ஆறுதல் அளித்தார்! மிருகத்தன்மையை மாற்றி

னார்! மக்களிடம் புதியதோர் மன மாறுதலை ஏற்படுத்தினார்!''

அவர் மறைந்தார் - அவரை அவனி மறவாது! அவருக்கு இருந்த மன உறுதியில் ஆயிரத்திலோர் பாகமேனும் நாம் பெற்றால்தான், அவனி நம்மைக் கண்டு, 'அவர் வாழ்ந்த நாட்டு மக்கள்தான் இவர்கள்' என்று கூறும்.

மனிதனுக்குள் இருந்துகொண்டு, சமயம் கிடைக்கும் போதெல்லாம் வெளிவந்து வெறிச்செயல் புரியும் மிருகத்தை அடக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

அகில உலகமும் நம்முடன் இந்தத் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு, நாட்டுக்கு ஏற்பட்டுள்ள புதிய நிலையைக் காப்பாற்ற, இந்த உறுதியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏகாதிபத்தியக் கோட்டையைத் தகர்த்து - யுகயுகமாக மூடிக் கிடந்த ஆலயங்களைத் திறந்து - மக்களிடையே புதிய மாண்பைக் காண்பதற்குத் தளராமல் பாடுபட்டு வந்த புனித புருஷரை இழந்துவிட்டோம்!

நமது வாழ்நாளிலே நேரிட்ட இந்த மகத்தான நட்டத்துக்கு, பலப்பல தலைமுறைகளுக்குப் பிறகும், ஈடுசெய்யக்கூடிய நிலை வராது.

இந்து மதத்தில் ஏறிப்போய் ஊறிப் போயிருந்த கேடுகளை எல்லாம், தமது பரிசுத்த வாழ்க்கையாலும் - தூய்மையான உபதேசத்தாலும் - புதிய தத்துவார்த்தத்தாலும் நீக்கும் பணியில் அவர் ஈடுபட்டிருந்தார் !

'இந்த அரும்பணியால், அன்பு மார்க்கம் தழைக்கும்; அனைவரும் ஆண்டவனின் குமாரர்களே என்ற உண்மை துலங்கும்' என்று மனமார நம்பினார்!

அந்தோ! 'இந்த அகத் தூய்மையோ, புறத் தூய்மையோ, நெடுங்காலமாகக் குவிந்து வளர்ந்து போயுள்ள மத வெறியர்களைத் திருத்தாதே' என்று கூறி வந்தோம்; யாரிடமிருந்து அவர் அன்பு மார்க்கத்தை எதிர்பார்த்தாரோ - அங்கிருந்தே அவர் உயிரைக் குடிக்கும் ஒரு வெறி பிடித்த இந்து கிளம்பினான்; அவன், 'இந்து மார்க்கத்தையும், இந்து அரசையும் நிலைநாட்டும் நோக்கம் கொண்டவன்' என்று கூறப்படுகிறது; ஐதராபாத் சமஸ்தான சத்தியாக்கிரகத்திலும் கலந்து கொண்டவனாம்; பெயர் நாதுராம் வினாயக் கோட்சே!

உலகை நோக்கி - நமது உள்ளத்தை நோக்கி,

'உத்தமரை வீழ்த்தி விட்டான் ஓர் உலுத்தன்; அவருடைய உடலை நாங்கள் இழந்துவிட்டோம்; அவருடைய உத்தமக் கொள்கைகளின் மூலம், அவர் இனி என்றென்றும் வாழ்வார்; இந்தத் துக்க நாளன்று அவர், எங்கள் ஒவ்வொருவருடனும் கலந்துவிட்டார்; இனி அவரை எங்களை விட்டுப் பிரிக்க முடியாது; யமுனைக் கரையிலே அவருடைய சடலத்தைக் கொளுத்தினோம்; ஆனால், வீடு திரும்புமுன், எங்கள் உள்ளங்களிலே அவர் இடம் பெற்றிருப்பதைக் கண்டோம்; அவர் இதோ இருக்கிறார் - எங்கள் நற்குணத்துக்கும், நல்ல நடத்தைக்கும் காரணமாக விளங்கிவருகிறார்' என்று கூறவேண்டும்; சொல்லால் மட்டுமல்ல - செயலால் - அனைவரும்!

**(உத்தமர் காந்தியார் 30.1.1948-இல் மறைந்த செய்தி கேட்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் ''உத்தமரை இழந்தோம் - உலகெங்கும் அழுகுரல்'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையிலிருந்து)**

---

தற்காலத்து நாடகக் கலையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் ஆங்கிலம் படித்த மேதாவிகள் 'பெர்னாட்ஷாவையும், இப்ஸனையும்' நினைத்து ஒரு குரல் அழுவது வழக்கம். நாடகாசிரியர் இன்றி தமிழ்நாடு பாழ்த்துப் போகவில்லை என்று சமீபத்தில் தெரிந்து கொண்டேன்.

அண்ணாவின் ஓர் இரவு' நாடகத்தைப் பார்த்ததன் பயனாக, ''இதோ ஒரு பெர்னாட்ஷா' தமிழ்நாட்டில் இருக்கிறார். இப்சனும் இருக்கிறார். இன்னும் காலஸ்வொர்த்திகூட இருக்கிறார்''



-கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி.

# எம் அண்ணா



ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்றுபோல்
இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை
நூறாயிரம் கோடி என ஆண்டுபல வாழ்வதற்கு
நூலாயிரம் செய்திட்ட புலவர்களை ஈன்றாள்
எனினும்;

கலைமகளாம் நம் அன்னை, வள்ளுவனைத்
தலைமகனாய்ப் பெற்றெடுத்தாள்.
மலர் என்றால் தாமரை தான்
மன்னன் என்றால் கரிகாலன்
நூல் என்றால் திருக்குறளே
எனப்போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டான் - மாந்தரெல்லாம் களித்திட்டார்!
விண்முட்டும் மலையோரம் - நம்
கண்பட்டும்படாமலும்எழுகின்ற நச்சுமரம் போல
பண்பட்ட தமிழர் வாழ்வில் - முதுகில்
புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ
சாதிகளைக் காணாது குறள் ஒலித்த
தமிழ் மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்!
அறிவு மணங் கமழுகின்ற ஆலயங்கள் அற்றுப்போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோயில்கள்
கண்டுவிட்டார்.

மொழியுணர்வே இல்லாத வாயுணர்வின் மாக்கள்
- தமிழ்
'அழியினும் வாழினும் என்'னென்று இருந்திட்டார்.
அறநெறியே குறிக்கோளாய்த் திகழ்ந்திட்ட
பெருநிலத்தில்
பிறநெறிகள் பயிர்செய்தார் பிழை குவித்தார்.
மழையற்றுப்போன வயல்போல மாறிற்றுத் தமிழர்
மனம்;
அழுக்காறு - அவா - வெகுளி - இன்னாச்சொல்
நான்குமின்றி
நடக்காது வேலையென்று நடந்திட்டார் சில தமிழர்;
பொருளிலார்க்கு இவ்வுலக மில்லையென்று
பொருள் குவித்து வளம் செழித்த நாட்டில் -
இன்று
இருள் கவிந்து வாட்டம் கொடிபோட்டதங்கே.
வாடினாள் தமிழன்னை - சோகப் பாட்டுப்

பாடினாள் தமிழன்னை - சுடுநெருப்பில்
ஆடினாள் தமிழன்னை -
ஓடினாள் தமிழன்னை -
ஓடினாள் ஓடினாள்
ஒரு வழியும் கிடைக்கவில்லை,
புவியூர் விட்டுப் புகழூரில் வாழ்கின்றான்
கவியூரின் பெருவேந்தன் குறளாசான்
ஆண்டு சென்று; 'அருமை மகனே
வேண்டுகோள் ஒன்று விடுத்தேன்' என்றாள்!
'என்னம்மா' என்றான் குறளோன்!

# இதய மன்னரா!

‘தோண்டுகின்ற இடமெல்லாம் தங்கம் வரும்
தமிழகத்தில்
மீண்டும் நீ பிறந்திட வேண்டு’மென்றாள்.
‘தங்கம் எடுக்கவா’ என்றான்:
‘தமிழர் மனம் வாழ்வெல்லாம்
தங்கமாக ஆக்க’ என்றாள்,

இனிமேலே எனமகிழும்
உழவன் போல் உள்ளமெல்லாம் பூரிப்புத்
துள்ளி எழ

காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
‘கற்கண்டே! தேன்பாகே! திருக்குறளே!
நீ காஞ்சியிலே பிறந்திடுக’ என்றாள்,



## முதல்வர் கலைஞர்

‘இன்றென்ன ஆயிற்’றென்றான்.
‘குன்றனைய மொழிக்கு ஆபத்’தென்றாள்;
‘சென்றடையக் குடிலில்லை ஏழைக்’கென்றாள்;
‘கடிதோச்சி மெல்ல எறியத் தெரியாமல்
கொன்றெறியும் கோல் ஓங்கிற்’றென்றாள்;
‘அறிவில் -
கன்றனையோர் வீணில் கதைக்கின்ற கதையும்
சொன்னாள்.

அழுத கண்ணைத் துடைத்தவாறு
அமுத மொழி வள்ளுவனும்
‘அம்மா நான் எங்கே பிறப்ப’தென்றான்.
தொழுத மகன் உச்சி மோந்து - ஆல
விழுதனைய கைகளாலே அணைத்துக்கொண்டு
உழுத வயல் நாற்றின்றிக் காயாது

பிறந்திட்டான் நம் அண்ணனாக;
அறிவு மன்னனாக -
பொதிகைமலைத் தென்றலாய்
போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின் புதுமணமாய்
பதிகத்துப் பொருளாய்
பழந்தமிழர் புறப்பாட்டாய்
வந்துதித்தான் அண்ணன் - கீழ்
வானுதித்த கதிர்போல -
புரியாதார்க்கு ஒரு புதிர் போல!
அவன் புகழைப் பாடுதற்கு
அவன் வளர்த்த தம்பி நானும்
அவன் தந்த தமிழ் எடுத்து
இவன் வந்தேன் இதுதான் உண்மை.
தலைவரென்பார், தத்துவ மேதை என்பார்

நடிகர் என்பார் நாடக வேந்தர் என்பார்,
சொல்லாற்றல் சுவைமிக்க
எழுத்தாற்றல் பெற்றார் என்பார்.
மனிதரென்பார் மாணிக்கமென்பார்
மாநிலத்து அமைச்சரென்பார்
அன்னையென்பார் அருள்மொழிக் காவல் என்பார்
அரசியல் வாதி என்பார் - அத்தனையும்
தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர்
நெஞ்சத்து அன்பாலே
'அண்ணா' என்ற ஒரு சொல்லால்
அழைக்கட்டும் என்றே - அவர் அன்னை
பெயரும் தந்தார்.
அந்த அன்னைக் குலம் போற்றுதற்கு
ஔவைக்கோர் சிலை;
அறம் வளர்த்த கண்ணகிக்கோர் சிலை;
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்
வணங்காமுடிப் பாரதி தாசருக்கும் சிலை
வீரமா முனிவருக்கும் சிலை;
கால்டுவெல்போப்புக்கும் சிலை; கம்பர்க்கும் சிலை
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குறள் பரப்ப திருவள்ளுவர்க்கும் சிலை
பத்து சிலை வைத்ததினால் - அண்ணன்
தமிழின் பால் வைத்துள்ள
பற்றுதலை உலகறிய;
அந்த அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்த போது ...
ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார் ...
ஆணையிடுகிறார் எம் அண்ணா என்றிருந்தோம்.
அய்யகோ; இன்னும்
ஓராண்டே வாழப் போகிறேன் என்று அவர்
ஓர்விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!
எம் அண்ணா... இதயமன்னா...
படைக்கஞ்சாத் தம்பியுண்டென்று
பகர்ந்தாயே;
எமை விடுத்துப் பெரும் பயணத்தை ஏன்
தொடர்ந்தாய்...?

உன் கண்ணொளியின் கதகதப்பிலே வளர்ந்தோமே;
எம் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றி விட்டாய்?
நிழல் நீ தான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய் விட்டாய்;
நியாயந்தானா?
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம் முத்தல்ல;
நான்தானடா நன்முத்து எனச் சொல்லிக்
கடற்கரையில் உறங்குதியோ?...
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண் மூடிக்கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்...
இன்று மண் மூடிக் கொண்டு உன்னைப்
பார்க்காமல்

தடுப்பதென்ன கொடுமை!
கொடுமைக்கு முடிவு கண்டாய், எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதும் அண்ணா;
எழுந்து வா எம் அண்ணா...!
வரமாட்டாய்; வரமாட்டாய்;
இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா... நீ
இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா...
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா...!

*(பேரறிஞர் அண்ணா அவர்கள்
மறைவெய்திய போது,
பாடிய கவிதாஞ்சலியிலிருந்து)*

## வீரனின் நெஞ்சம்

சூட்கமேந்திக் களத்திலே குதித்த வீரன், 'கரி பாய்கிறதே - பரி பறந்து வருகிறதே' என்று எங்ஙனம் கலங்க மாட்டானோ - அது போலவே 'காரிய சித்தியே வாழ்க்கையின் இலட்சியம்' என்று கருதிவிட்டவன், மாடு மனை போனாலும் - மக்கள் சுற்றம் இழந்தாலும் - பெறுதற்கரிய உயிரையே குடித்தேகும் கொடுமைகள் வரினும் - தேள் கிணற்றிலே தள்ளப்படினும் - தீக்குண்டத்தில் உருட்டப்படினும் 'அஞ்சேன், அயரேன்' என்று ஆவேசம் கொண்டுவிடுகிறான்.

—பேரறிஞர் அண்ணா





# தமிழகம் தொழில்மயமாகிறது!

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், செங்கை-அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த கும்மிடிப்பூண்டி 'சிப்காட்' தொழில் வளாகத்தில் 11.1.90 அன்று மூன்று தொழிற்சாலைகளைத் தொடங்கி வைத்தார்; இரண்டு தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத் துறை அமைச்சர் திரு. இராம கிருஷ்ணன் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார். ''மாண்புமிகு முதல்வர் அவர்கள் - இப்போதுதான் என்றல்ல; முன்ப தமிழக முதல்வராக இருந்த காலந்தொட்டே தமிழ்நாடு தொழில் வளர்ச்சி அடைய அரும்பாடுபட்டு வருகிறார். மாதம் ஒரு தொழிற்சாலை என்கிற அரசின் குறிக்கோளால், தமிழ்நாடு விரைவிலேயே தொழில் வளம் மிகுந்த முதல் மாநிலம் ஆகி விடும்'' என்று தனது தலைமை உரையில் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தினுடைய தலைவர் திரு. கே.ஜே.எம். ஷெட்டி வரவேற்புரையுடன் தொடங்கிய இவ்விழாவில் திருமதி மரகதம் சந்திரசேகர் எம்.பி., தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கி.வேணு, நெல்லிக்குப்பம் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சமீர்வியாஸ், இ.ஆ.ப., மற்றும் ஊராட்சி மன்ற - ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் வருகை தந்திருந்தார்கள். விழா முடிவில் சிப்காட் நிறுவனத் தலைமைப் பொறியாளர் திரு. பி.எஸ். நாகேந்திரய்யா நன்றி கூறினார்.

கும்மிடிப்பூண்டி சிப்காட் வளாகத்தில் செஞ்சுரி சேஃப்டி கிளாஸ் இன்டஸ்ட்ரீஸ், சூரியோதயா பிளாஸ்டிக்ஸ், சென்னை, ஹைட் ராலிக் ஹோஸ் ஆகிய தொழிற்சாலைகளைத் தொடங்கி வைத்தும் - கே.எஃப். லாக்ஸ், எஃப்.எம். பிளாஸ்டிக் ஆகிய தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டியும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''பிளாஸ்டிக் தொலைக் காட்சிப் பெட்டிகள் தயாரிப்பதற்கான தொழிற்சாலையின் தொடக்க விழாவும் - ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தொழிற்சாலையின் தொடக்கவிழாவும் - உறுதியான கண்ணாடி கிளாஸ் (Toughened Glass) தயாரிக்கின்ற தொழிற்சாலை தொடக்க விழாவும் இன்று இங்கு நடைபெறுகின்றன.

''தோல்பெட்டிகளுக்குத் தேவையான பித்தளைப் பூட்டுகளைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையின் அடிக்கல் நாட்டு விழாவும், கோ-எக்ஸ்டிருடட் பிலிம்ஸ் தயாரிப்பதற்கான தொழிற்சாலையின் அடிக்கல் நாட்டு விழாவும், இத்துடன் இணைந்து - இந்த ஐந்து தொழிற்சாலைகளின் சார்பில் ஏறத்தாழ பத்துக் கோடி ரூபாய் அளவில் முதலீடு செய்யப் பட்டு, அதற்கு 'சிப்காட்' நிறுவனம் நிறைந்த ஒத்துழைப்பைத் தந்து, வேறு பல நிதி வழங்கக்கூடிய நிறுவனங்களின் சார்பிலும் உதவியைப் பெற்று - அரசின் சார்பில் அளிக்கப்படக்கூடிய சலுகைகளையெல்லாம் பெற்று, தொழிற்சாலைகளை இந்தப் பேட்டையிலே தொடங்குகிறார்கள்.

''சிப்காட் என்கிற இந்தத் தொழில் வளர்ச்சிக்கான நிறுவனத்தை தமிழ் நாட்டில் 1971-ஆம் ஆண்டு, நான் ஆட்சிப் பொறுப்பையேற்றபோது தொடங்கினேன்.

''அதனுடைய விளைவாக, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கெல்லாம் இராணிப்பேட்டையிலும், ஒசூரிலும் இந்தத் தொழிற்பேட்டைகள் உருவாகி, இன்றைய தினம் ஏழு தொழிற் பேட்டைகள் கும்மிடிப்பூண்டியைப் போல இந்த மாநிலத்திலே உருவாகியிருந்தாலும்கூட - இராணிப்பேட்டை, ஒசூர் ஆகிய இந்த இரண்டு தொழிற் பேட்டைகள்தான் இந்தியாவிலே இருக்கின்ற வேறு சில தொழிற் பேட்டைகளோடு ஒப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றன.

"அதேபோன்ற வளர்ச்சியைக் கும்மிடிப்பூண்டியும் பெற வேண்டும்; கடலூரும் பெறவேண்டும்; தூத்துக்குடியிலும், மானாமதுரையிலும் இருக்கின்ற தொழிற்பேட்டைகளும் பெற வேண்டுமென்ற ஆசையோடுதான் இதைக் குறிப்பிடுகிறேன்."

# தமிழ்நாடு மின்சார வாரியம்

## வட சென்னை அனல் மின்திட்டம்

## ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) மூன்று நகல்களோடு மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல் மின்னாக்கம்-1 மூன்றாவது தளம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் பெயர் | : | வட சென்னை அனல் மின்திட்டம் முதல் கட்டப் பணிக்கு இயல் நீர் தேக்கங்கள், மேல் நிலை நீர்த் தொட்டி மற்றும் அதன் தொடர்பான பொதுவியல் பணிகள். |
| 2. | ஒப்பந்த வரையறை எண் | : | எஸ்.இ.சி.டி.1/வ.செ.அ.மி.நி./12 |
| 3. | பிணை வைப்புத் தொகை | : | ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) |
| 3எ | மொத்த வேலையின் தோராய மதிப்பு | : | ரூ.220 இலட்சங்கள் |
| 4. | ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும் | : | 1990, பிப்ரவரி 28-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12.00 மணி வரை |
| 5. | தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும் | : | 1990, பிப்ரவரி 28 ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி |
| 6. | **ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை** | | |
| | தமிழ்நாட்டிற்குள் | : | ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| | தமிழ்நாட்டிற்கு வெளியே | : | ரூ.550/- (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்) (ரூ.500/- + வரி ரூ.50/-) |
| 7. | ஒப்பந்தத்தை அனுப்புதல் | | இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு என்பதால் ஒப்பந்தம் கேட்பதும் இரு பிரிவுகளாகத் ''தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தம்'' என்றும் ''ஏல விலைக் குறி ஒப்பந்தம்'' என்றும் குறிப்பிடப்பட்டு மூடி அரக்கு முத்திரையிட்டு தனித்தனி உறைகளில் அனுப்பப்பட வேண்டும். உரிய நாளில் தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறக்கப்படும். தொழில் நுட்ப இனங்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பிறகு ஏல விலைக்குறி ஒப்பந்தங்கள் திறக்கப்படும் நாள் அறிவிக்கப்படும். தொழில் நுட்ப இன ஒப்பந்தத்தில், விலைகளைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தல் கூடாது. |

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள் தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை - 600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையைப் பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்தி பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு, மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல் மின்னாக்கம்-I அலுவலகத்தில் 29.1.90 காலை 10-30 மணி முதல் 26.2.90 மாலை ஐந்து மணி வரை பெற்றுக் கொள்ளலாம். பொதுவாக, ஒருவருக்கு ஒரே ஒரு ஒப்பந்த வரையறை மட்டும் தான் வழங்கப்படும். ஒப்பந்த வரையறை பெறுவதற்கு செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்திற்காகவும் திரும்பத்தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.30/- கூடுதலாகச செலுத்த வேண்டும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்ப ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

பிணைவைப்புத் தொகையின்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் ஒப்பந்தங்களும் ஏறகப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. விற்பனை செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும் போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

**தலைமைப் பொறியாளர்/பொதுவியல் வடிவமைப்பு**

டிஐபிஆர்/190/எம்எஸ்/90



# தமிழ்நாடு வளம் பெற புதிய திட்டங்கள்

### தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 18-1-1990 அன்று

## மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் ஆற்றிய உரை

**மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே !**

இப் புத்தாண்டில், தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதலாம் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் பொங்கல் திருநாள் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. நாடாளுமன்றத்தில், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் பேருரையில், புதிய தேசிய முன்னணி அரசு அறிவித்துள்ள தொடக்க நடவடிக்கைகளை இந்த அரசு வரவேற்கின்றது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 263ஆம் பிரிவின்கீழ், மாநிலங்களுக்கு இடையேயான குழு (Inter-State Council) ஒன்றை அமைப்பது என்றும், திட்டக் குழுவிற்கு அரசமைப்புச் சட்ட

முறைத் தகுதி வழங்குவது என்றும் புதிய அரசு எடுத்துள்ள முடிவுகள் தனி முக்கியத்துவம் வாய்ந்தவை. முழுமையான கூட்டாட்சி, மாநிலங்களுக்கு சுயாட்சி போன்ற கொள்கைகளில், தங்களுடைய உறுதிப்பாட்டினைப் பிரதிபலிக்கும் வகையில், மத்திய அரசு மேற்கொண்டும் நடவடிக்கைகள் எடுக்கும் என நம்புகிறோம்.

3. தேசிய அளவில் இணக்கமும் கருத்தொற்றுமையும் கொள்வதன் மூலம், பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் எண்ணத்தை வரவேற்கிறோம். அதிகாரங்கள், பொறுப்புகள், நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைப் பஞ்சாயத்து அமைப்புகளுக்குப் பரவலாக்கும் செயல், மத்திய-மாநில கூட்டமைப்புத் தன்மையை எவ்வகையிலும் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்படும் என்று நம்புகிறோம். தூய்மையான, வெளிப்படையான அரசு அமைய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை, குறிப்பாக, வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு சுயாட்சி அளிப்பது, ''லோக் பால்'' ஏற்படுத்தும் சட்டம் இயற்றுவது ஆகிய நடவடிக்கைகளை வரவேற்கிறோம்.

4. நாடாளுமன்றம் மற்றும் சட்ட மன்றங்களில் ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கான ஒதுக்கீட்டை மேற்கொண்டும் 10 ஆண்டுகளுக்கு நீட்டிக்க சட்ட முன்வடிவு ஒன்றை புதிய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. நமது அரசு இந்த நடவடிக்கையை முழுமையாக ஆதரிக்கிறது. இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு ஏற்பு அளிக்கச் சட்டப் பேரவையின் இக்கூட்டத் தொடரில் சட்டம் ஒன்று கொண்டு வரப்படும்.

5. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மத்திய அரசுத் துறைகளில், கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் இட ஒதுக்கீடு செய்வது குறித்த மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச் செயற்படுத்துமாறு மத்திய அரசை வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டப்பேரவை கடந்த ஆண்டு மே திங்களில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. மண்டல் கமிஷனின் பரிந்துரைகளைச் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தேசிய முன்னணி அரசு அறிவித்துள்ளது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

6. நடப்பாண்டில், தென்மேற்குப் பருவ மழை, மாநில அளவில் மொத்தத்திலும், பெரும்பாலான மாவட்டங்களில் திருப்திகரமாகவும் இருந்திருக்கிறது. வடகிழக்குப் பருவ மழை, மாநில அளவில், 1988ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகமே என்றாலும், 8 மாவட்டங்களைப் பொறுத்தவரை இயல்பான அளவைக் காட்டிலும் 20 சதவீத அளவிற்கு மேல் குறைவாகவே இருந்துள்ளது. தென் மாவட்டங்களில் அண்மையில் பெய்த மழையினால் நிலைமை ஓரளவுக்குச் சீராகியுள்ளது. வேளாண்மை உற்பத்தியை

**ஆதிதிராவிடர், பழங்குடியினர்**
**ஆகியோருக்கான ஒதுக்கீட்டை**
**மேற்கொண்டும் 10 ஆண்டுகளுக்கு**
**நீட்டிக்க சட்ட முன்வடிவு**

உயர்த்த அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் நல்ல அளவுக்கு உற்பத்தி கிட்ட உதவியுள்ளது. நடப்பாண்டில் அரிசி உற்பத்தி 58.5 இலட்சம் டன் அளவுக்கு, அதாவது, கடந்த காலத்தில் கிட்டிய உயரளவு உற்பத்திக்கு நிகரான அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். கரும்பு உற்பத்தி 24.20 இலட்சம் டன் அளவுக்கும் பயறு வகைகளின் உற்பத்தி 5·2 இலட்சம் டன் அளவுக்கும் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இவை ஏற்கெனவே எய்திய உயர் உற்பத்தியைவிட அதிகமாக இருக்கும். சிறு தானியங்கள் உற்பத்தி 13.88 இலட்சம் டன், பருத்தி உற்பத்தி 5.2 இலட்சம் பொதி என்னும் அளவுகளில் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

7. தமிழ் நாட்டில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இவ்வரசு தலையாய முன்னுரிமை அளித்துள்ளது. இதுவரை குடிநீர் வசதியளிக்கப் படாத 10,323 குடியிருப்புகளுக்கு இந்த அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து, நடப்பாண்டில் இவற்றில் 5,166 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி அளித்துள்ளது. எஞ்சியிருக்கும் 5,157 குடியிருப்புகளுக்கும் 1990 மே மாத முடிவிற்குள் குடிநீர் வசதியளிக்கப்படும். வறட்சி நிவாரணப் பணியின் ஒரு பகுதியாக 5,149 துளைக் கிணறுகள் அமைப்பதற்கான விரைவுத் திட்டம் வெற்றிகர மாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில்**
**குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க**
**முன்னுரிமை!**

8. 1989 ஜனவரியில் இந்த அரசு பொறுப் பேற்றபோது, கல்பாக்கம், இராமகுண்டம் ஆகிய இடங்களிலுள்ள மத்திய மின் நிலையங்களில் மின் உற்பத்திப் பிரச்சினை காரணமாகத் தமிழ்நாடு கடுமையான மின் பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. இதன் விளைவாக, ஏப்ரல் மாதத்தில் மின்வெட்டை 60 சதவீதமாக அதிகரிக்க வேண்டியதாயிற்று. ஜூலை இறுதியில், மின்வெட்டு 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டது, டிசம்பர் 20ஆம் நாள் முதல் மின்வெட்டு 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. மேலும், இந்த ஆண்டு ஜனவரி 12ஆம் நாளிலிருந்து மின்வெட்டு அறவே நீக்கப்பட்டுவிட்டது. இந்நிலை மார்ச் இறுதிவரை தொடரும் என்று எதிர்பார்க்கிறோம். மேட்டூர் 3-வது மின் உற்பத்தி நிலையத்தைத் (210 மெ.வா.) தொடங்கவும், எண்ணூரிலுள்ள 110 மெ.வா. திறன் கொண்ட மூன்று மின் உற்பத்தி நிலையங்களையும் மீண்டும் பயனுக்குக் கொண்டு வரவும், அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்திச் செயல்திறனைப் பெருக்கவும் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாலும், புனல் மின் உற்பத்தி நீர்த் தேக்கங்களில் இயல்பான அளவுக்கு நீர் வரத்து இருந்ததாலும், மின்வெட்டின் அளவைக் குறைக்க

முடிந்தது. தூத்துக்குடி மின் உற்பத்தி நிலையத்தில் 1989ஆம் ஆண்டில் எய்தப்பெற்ற 83 சதவீத மின்நிலையச் செயல் திறன் பாராட்டத்தக்க ஒரு சாதனையாகும்.

**9.** மத்திய அரசு அரிசி, பாமாயில், சர்க்கரை ஆகியவற்றின் ஒதுக்கீட்டு அளவுகளை மிகவும் குறைத்துவிட்டதால், நமது பொது விநியோக முறை பெரும் அளவில் பாதிக்கப்பட்டது. ஆயினும் நமது அரசு, கொள்முதல் அளவை உயர்த்தவும், வெளிச்சந்தையில் 3 இலட்சம் டன் அரிசி வாங்கவும் நடவடிக்கைகள் எடுத்தது. இந்த நடவடிக்கைகளினால் 1989ஆம் ஆண்டில் பொது விநியோக முறை மூலம் சுமார் 15 இலட்சம் டன் அரிசி வழங்க முடிந்தது. 1988ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சுமார் 13 இலட்சம் டன் என்ற அளவுடன் ஒப்பிடுகையில் இது அதிகமாகும்.

**10.** அரிசி பிரச்சினையில், புதிய மத்திய அரசு தமிழ் நாட்டிற்கு உதவிட முன்வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நமது அவசரத் தேவைக்கென டிசம்பர் மாதத்தில் கூடுதலாக 50,000 டன் அரிசி ஒதுக்கப்பட்டது. மேலும், 1990 ஜனவரியில் மாத ஒதுக்கீட்டினை 60,000 டன்னாக உயர்த்தியுள்ளது. அடுத்துவரும் மாதங்களில், மாதாந்திர ஒதுக்கீட்டின் அளவு, குறைந்த பட்சம் 55,000 டன்னாக இருக்கும். இந்த ஒதுக்கீட்டு அளவை நம்முடைய முறையீட்டுக்கு இணங்க மத்திய அரசு மேலும் உயர்த்தும் என்று எதிர்பார்க்கிறோம். நம் மாநிலத்தின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டு மத்திய அரசு நல்கிய இவ்வுதவியை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். சம்பாப் பருவத்தில் நெல் கொள்முதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் 1990ஆம் ஆண்டில் வெளிச்சந்தையில் தேவையான அளவுக்கு அரிசி வாங்கவும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இக்காரணங்களால் வரும் ஆண்டில் நியாயவிலைக் கடைகளில் அரிசி பற்றாக்குறை இருக்காது என்பது உறுதி.

**தமிழ்நாட்டுக்கு மத்திய அரசின் மாதாந்திர அரிசி ஒதுக்கீட்டின் அளவு குறைந்த பட்சம் 55,000 டன்னாக இருக்கும்**

**11.** மத்திய அரசு, 1989 பிப்ரவரியில் அரிசி விலையை உயர்த்தியதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இருப்பினும், அந்த விலை உயர்வை நமது அரசு இதுவரை நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. அதே நேரத்தில், நடப்பாண்டில் நெல் கொள்முதல் விலை குவின்டால் ஒன்றுக்கு ரூ. 25 உயர்த்தப்பட்டது. மேலும், நடப்பாண்டில், மொத்தம் ரூ. 38.5 கோடி செலவில், குவின்டால் ஒன்றுக்கு ரூ. 35 ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதர மாநிலங்களில் வெளிச் சந்தையில் அரிசி வாங்க வேண்டியிருந்ததால் நிதிச்சுமை கணிசமாகக் கூடியுள்ளது. வரும் ஆண்டிலும் பொது விநியோக முறையில் அரிசி தட்டுப்பாடின்றிக் கிடைக்க வெளிச் சந்தையில் கணிசமான அளவு அரிசி வாங்க வேண்டிய நிலையில் உள்ளோம். 1988–89-ல் ரூ. 130 கோடியாக

இருந்த உணவு மானியத் தொகையின் அளவு 1989–90-ல் ரூ. 190 கோடியாகப் பெருமளவுக்கு அதிகரித்துள்ளது. மேலும், இலவச அரிசி விநியோகத் திட்டத்திற்கு சுமார் ரூ. 36 கோடி செலவாகிறது.

**12.** நடப்பாண்டில், மாதம் ஒன்றுக்கு ரூ. 300-க்கும் குறைவாக வருமானமுள்ள 83 இலட்சம் குடும்பங்களுக்கு ஐந்து முறை இலவசமாக 5 கிலோ அரிசி வழங்கி இருக்கிறோம். இத் திட்டம் பரவலாக வரவேற்பு பெற்றுள்ளது என்றாலும், பயனாளிகளின் வருமானக் கணக்கு விவரங்களைப் பதிவு செய்ததில் தவறுகள் இருப்பதால், உண்மையிலேயே வறிய நிலையில் இருந்த குடும்பங்கள் பலவற்றிற்குப் பயன் கிட்டவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 300 என்ற வரம்பு மிகக் குறைவானது என்றும், அது உயர்த்தப்பட வேண்டும் என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட உறுதி மொழிக்கு ஏற்ப, ஒவ்வோராண்டும் தமிழ்ப் புத்தாண்டு, தீபாவளி, பொங்கல் ஆகிய மூன்று விழா நாட்களிலும் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 வரையிலும் வருமானமுள்ள குடும்பங்கள் அனைத்திற்கும், இனி இலவச அரிசி வழங்க இப்போது முடிவு எடுத்துள்ளோம். இதன் காரணமாக ஒவ்வொரு முறையும், ஒரு கோடியே இருபது இலட்சம் குடும்பத்தினர் பயன்பெறுவர்.

**மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000**

**வரையிலும் வருமானம் உள்ள**

**குடும்பங்கள் அனைத்துக்கும்,**

**ஆண்டுக்கு மூன்று தடவை இலவச அரிசி!**

**13.** சட்டப் பேரவையில் சென்ற முறை நான் உரையாற்றுகையில், மாநிலத்தின் நிதி நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும், அதன் காரணமாக, 1988–89ஆம் ஆண்டிற்கு ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டச் செலவான ரூ. 1,457 கோடி என்ற அளவைக் குறைக்க வேண்டியிருக்கும் என்றும் சுட்டிக் காட்டினேன். அதையொட்டி, அந்த ஆண்டுத் திட்டச் செலவின் அளவை ரூ. 1,202 கோடியாகக் குறைத்திட நேர்ந்தது. 1989–90ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், திட்டச் செலவின் அளவை, ரூ. 1,360 கோடியாக உயர்த்த வகை செய்யப்பட்டது. நடப்பாண்டின் திட்டச் செலவு இந்த அளவுக்குக் குறையாமல் இருக்கும்.

**14.** தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு அரசு அதிக முன்னுரிமை அளித்துள்ளது. அரசின் புதிய தொழில் கொள்கை தொழிலதிபர்களிடையே நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கும் (TIIC) தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கும் (SIPCOT) கடன் விண்ணப்பங்கள் கணிசமாக அதிகரித்துள்ளன. ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள தொழில் உரிமங்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.

**15.** தொழில் வளர்ச்சிக்கு அளிக்கப்படும் சலுகைகளும் ஊக்க உதவிகளும் திருத்தி வரையறுக்கப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டுள்ளன. தொழில்கள் தொடங்குவதற்கான மூலதன உதவித் தொகை, வட்டியில்லா விற்பனை

வரித் தள்ளிவைப்பு ஆகிய சலுகைகளை, 105 பின்தங்கிய வட்டங்களிலும் மாநிலத்திலுள்ள எல்லா வளர்ச்சி மையங்களிலும் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், தெரிந்தெடுக்கப் பட்டுள்ள குறிப்பான 10 தொழில்களுக்கு சிறப்பு மூலதன உதவித் தொகை கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**16.** கருங்கல் (கிரானைட்) தொழிலில் ஏற்றுமதியும் வேலை வாய்ப்பும் பெருகிடும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அத் தொழிலின் வளர்ச் சிக்கு ஊக்கமளிக்க வகுக்கப்பட்டுள்ள புதிய கொள்கை, முதலீட்டாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரை, கூட்டுறவுத் துறையில் 5 புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க இசைவுக் கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) பொறுப்பில் மொத்தம் ரூ. 290 கோடி முதலீட்டுடன், கூட்டுத் துறையிலும் மற்றும் ஊக்கத் துறையிலும் புதிதாக 8 தொழில் திட்டங்களைத் தொடங்க அனுமதியளிக்கப்பட் டுள்ளது. மொத்தம் ரூ. 45 கோடி முதலீட்டில் 5 தொழில் திட்டங்களை தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (ELCOT) மேற்கொண் டுள்ளது.

**17.** தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) இதுவரை 7 தொழில் வளாகங் களை உருவாக்கியுள்ளது. அவற்றில் செய்யப்பட் டிருக்கும் முதலீடு மொத்தம் ரூ. 500 கோடிக்கும் அதிகமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த 7 வளாகங்களில் இன்றியமையா அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. நடப்பாண்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் மயிலாடுதுறை—பூம்புகார் பகுதி, பெரியார் மாவட்டத்தில் ஈரோடு—பெருந்துறைப் பகுதி, நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கை கொண்டான்—மானூர் பகுதி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ரூ. 30 கோடி செலவில், 3 வளர்ச்சி மையங்களை அமைக்க நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளோம்.

**18.** சமுதாயத்தில் மகளிர் நிலையை உயர்த்துவது என்ற கொள்கையை நிறைவேற்று வதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுப்பணி நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலை வாய்ப்பில் 30 சதவீதம் மகளிருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிகளிலும் முதல் இரண்டு வகுப்புகளில் எழும் அனைத்து ஆசிரியர் பணியிடங்களிலும் மகளிரே நியமிக்கப்பட்டு வருகின்றார்கள். பல்வேறு அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறும்பொழுது 30 சதவீதத்தை மகளிருக்கு ஒதுக்கும் கொள் கையைக் கடைப்பிடித்து வருகின்றோம். தேர்தல் வாக்குறுதிக்கு ஏற்ப, ஏழை, நடுத்தர வகுப்பைச் சார்ந்த பெண்களுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பு வரையிலும் இலவசக் கல்வி வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத் தின்கீழ் இதுவரை ரூ. 5.05 கோடி செலவில் சுமார் 10,100 பெண்கள் பயன் அடைந்துள்ளார்கள். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கருவுற்ற மகளிருக்கு 200 ரூபாய் உதவித் திட்டத்தின்கீழ் 65,597 தாய்மார்கள் பயன் அடைந்துள்ளனர். நிதிநிலை அறிக்கையில் பெண்களுக்கு இந்து சட்டத் தின்கீழ் பரம்பரைச் சொத்தில் சம உரிமை வழங்க, சட்டத் திருத்தம் மேற்கொள்வோம் என்று அறிவித் திருந்தோம். இச் சட்டத் திருத்தம் இந்த அவையில் நிறைவேற்றப்பட்டுக் குடியரசுத் தலைவரின்

ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**19.** 1990-91 ஆம் ஆண்டு, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க ஆண்டாகும். முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் பணியாற்றும் மாநிலத் திட்டக்குழுவில் சிறந்த வல்லுநர்கள் இடம் பெற்றுள்ளனர். திட்டக்குழு தமிழ்நாட்டிற்கான எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கும் பணியைக் கணிசமான அளவுக்கு நிறைவேற்றியுள்ளது. எனினும், தேசிய அளவில் எட்டாம் திட்டத்தை வகுக்கவும், திட்டக் காலத்தில் மாநிலங்களுக்கான மத்திய நிதியுதவி முறைகளைத் தீர்மானிக்கவும் இன்னும் சிறிது காலமாகும். மேலும், ஒன்பதாம் நிதிக் குழுவானது, அதன் இறுதி அறிக்கையை 1989-ம் ஆண்டு கடைசியில்தான் குடியரசுத் தலைவரிடம் அளித்துள்ளது. இக் குழுவின் பரிந்துரைகளின் மீதான மத்திய அரசின் முடிவுகள் எதிர்பார்க்கப் படுகின்றன. நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்பிலும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி உதவியிலும் மத்திய அரசு தாராள அணுகுமுறையைப் பின்பற்றும் என நம்புகிறோம்.

**20.** 1989-ம் ஆண்டு ஜூன் திங்களில், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களும் நேரடியாகக் கலந்துரையாடியதன் அடிப்படையில், தெலுங்கு-கங்கைத் திட்டத்தை விரைவுபடுத்த அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் சென்னை மாநகருக்கு 12 ஆயிரம் மில்லியன் கன அடி நீர் வழங்கக்கூடிய இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், நடப்பாண்டில் நம் அரசு ஆந்திர மாநிலத்திற்கு ரூ. 60 கோடி வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. அதில், ரூ. 30 கோடி வழங்கப் பட்டுவிட்டது. சென்னை மாநகருக்குப் பயன் அளிக்கும் மிக முக்கியத் திட்டமாக விளங்கும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் எவ்வித காலதாமதமோ மறு சிந்தனையோ இருக்காது என்று, தற்போதைய ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளமைக்காக நமது நன்றியைத்தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறோம். இத் திட்டம் செயல்படுத்தப்படுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆந்திர மாநில அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தவும், ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள கால அளவிற்குள் இத் திட்டம் நிறைவு பெற அவர்களின் ஒத்துழைப்பைக் கோரவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்வோம்.

**21.** அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், காவிரி நீர் பிரச்சினையை நடுவர் மன்றத்தின் தீர்வுக்கு அனுப்ப வேண்டுமென நம் அரசு, மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. இதை நாம் அண்மையில் அவர்களிடம் நினைவூட்டியுள்ளோம். காவிரி

## தெலுங்கு-கங்கைத் திட்டத்தை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை

பிரச்சினை குறித்து மேற்கொண்டும் விவாதிக்கத் தயாராக உள்ளதாகக் கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதைக் கருத்தில் கொண்டுள்ளோம். பல ஆண்டுகளாக சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையே நடைபெற்ற விவாதங்கள் எவ்விதப் பலனையும் அளிக்கவில்லை. எனவே, இப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு அனுப்புவது மேலும் தாமதப் படக்கூடாது என்பதே நம்முடைய நிலையாகும். நடுவர் மன்றத்திற்கு இப் பிரச்சினையை அனுப்பிய பிறகும்கூட, பேச்சுவார்த்தைகளின் மூலமாக சுமுகமான தீர்வு காணும் முயற்சிகளை ஏற்பதற்குத் தயக்கம் காட்டமாட்டோம்.

**22.** தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களினால், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சித் தேர்தல்களைத் தள்ளிப் போட நேர்ந்தது. இவற்றில் மிக முக்கியமான காரணம், நகராட்சி நிர்வாகம் (Nagar Palikas) குறித்த அரசமைப்பு 65ஆம் திருத்தச் சட்ட முன் வடிவைச் சட்டமாக நிறைவேற்ற முந்தைய மத்திய அரசு கருதியதேயாகும். இந்தச் சட்ட முன்வடிவு நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப் படவில்லை. எனவே, மாநகராட்சிகளில் உள்ள இடங்களில் 30 சதவீதத்தை மகளிருக்கு ஒதுக்கவும், ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு மொத்த மக்கள் தொகையில் உரிய விகிதத்திற்கேற்பப் பிரதிநிதித்துவம் அளிக்கவும் சட்டம் கொண்டுவரக் கருதியுள்ளோம். சென்னை மாநகரில் கோட்ட (division) அளவில் சராசரி மக்கள் தொகை, சுமார் 22,000 ஆகும். இது பெங்களூர், கல்கத்தா, டில்லி, பம்பாய் போன்ற ஏனைய மாநகர் வார்டுகளில் உள்ள சராசரி மக்கள் தொகைக்குக் குறைவாகவேயுள்ளது. இருப்பினும், சென்னை மாநகரில் 8 மிகப் பெரிய கோட்டங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் மக்கள் தொகை சுமார் 30,000-க்கு மேல் உள்ளது. அதே நேரத்தில், 10 கோட்டங்களில், ஒவ்வொன்றிலும் மக்கள் தொகை 10,000 முதல் 15,000 வரை மட்டுமே உள்ளது. மக்கள் தொகை, வாக்காளர் எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்தவரை, கோட்டங்களுக்கிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்தில், எந்த ஒரு கோட்டத்திலும் மக்கள் தொகை 30,000-க்கு மேற்படாமலும், அதே நேரத்தில் பெரும்பாலான கோட்டங்களில் மக்கள் தொகை 15,000 முதல் 25,000 வரையில் மட்டுமே இருக்கும் வகையிலும், கோட்டங்களின் அமைப்பை மாற்றியமைக்கக் கருதியுள்ளோம். இந்த மாற்றங்கள் அடுத்த சில மாதங்களில் செய்யப்பட்டு, இந்த மூன்று மாநகராட்சிகளுக்கும் 1990 செப்டம்பர் 30-க்கு முன்னர் தேர்தல் நடைபெறும்.

## மாநகராட்சிகளுக்கு 1990 செப்டம்பர் 30-க்கு முன்னர் தேர்தல் நடைபெறும்

**23.** கடந்த ஆண்டில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல்கள் நடைபெறுவதற்கு உறுதி செய்ய சிறப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டதை உறுப்பினர்கள் நன்கறிவர்.

பல்வேறு அரசியல் கட்சிகளிடமிருந்து சார்புரைகள் வரப்பெற்றதன் பேரில் இத் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டியதாயிற்று. தேர்தல்கள் நடத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்களை நீக்கும்பொருட்டு, சட்டத்திருத்தங்கள் தேவைப் படுகின்றன. அரசு, சட்டப்பேரவையின் எதிர் வரும் வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தொடரின் போது இத் திருத்தங்களைக் கொண்டுவரக் கருதியுள்ளது. இத் திருத்தங்களின் அடிப்படையில், தேர்தல் பணிகள், 1990 ஆகஸ்ட் மாதம் தொடங்கி நவம்பர் மாதத்தில் முடிவுறும்.

**24.** இந்தியாவிலேயே முதன் முதலாக இந்த அரசுதான் முதலமைச்சர்—அமைச்சர்கள் உட்பட, பதவியில் இருப்போர் மீது தவறான நடத்தை குறித்த குற்றச் சாட்டுகளை விசாரித்து, புலனாய்வு நடத்த வகை செய்யும் சட்டம் இயற்றியது. தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளோர் (குற்றநடத்தை) சட்டம், இது தொடர்பான முன்னோடிச் சட்டமாகும். இந்தச் சட்டம் 1977-ல் ரத்து செய்யப்பட்டுவிட்டது. இதனை மீண்டும் கொண்டு வருவதாக தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டிருந்தது. நாடாளு மன்றத்தில் அண்மையில் கொண்டுவரப்பட்ட லோக் பால் சட்ட முன்வடிவு போன்று, முதலமைச்சர், அமைச்சர்கள் உட்பட, பதவி வகிப்பவர்களுக்கெதிரான தவறான நடத்தை குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்கவும், புலனாய்வு நடத்தவும் வகை செய்யும் சட்ட மொன்றை வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் கொண்டுவர முடிவு செய்துள்ளோம்.

**25.** இந்தக் கூட்டத் தொடரில் உங்கள் விவாதங்கள், ஆக்க பூர்வமானவையாகவும் மக்களாட்சியின் உயரிய மரபுகளைக் கட்டிக் காப்பவையாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

# பெண்களுக்குச் சொத்தில் சமஉரிமை

## தமிழக அரசின் சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல்

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்க வகை செய்யும் தமிழக அரசின் சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார். இந்தத் தகவலை, சட்டமன்றத்தில் 20-1-90 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்.

சட்டமன்றத்தில் கேள்வி நேரம் முடிந்ததும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிக்கை ஒன்றைப் படித்தார். அந்த அறிக்கை வருமாறு:

"மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 18-1-90 அன்று இந்த அவையிலே உரையாற்றும்போது, இந்து வழிமுறையுரிமை (வாரிசுடைமை) ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் சம உரிமை வழங்கவிழைகின்ற 1989-ஆம் ஆண்டு இந்து வழிமுறையுரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவிற்குக் குடியரசுத் தலைவரின் இசைவினை எதிர்நோக்கியிருப்பதாகக் கூறியிருந்தார். இந்த அவையிலே அந்த மசோதா கடந்த ஆண்டு 6-5-89 அன்று நிறைவேற்றப்பட்டு-மத்திய அரசுக்கு 24-5-89 அன்று அனுப்பப்பட்டது.

"அந்தச் சட்ட முன்வடிவிற்கு மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் தனது இசைவினை அளித்துள்ளார் என்பதையும், அந்தச் சட்ட முன்வடிவு 18-1-90-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் நான்காம் பகுதி 2-ஆம் பிரிவின் சிறப்பிதழில் தமிழ்நாடு சட்டம் 1/1990 ஆக வெளியிடப்பட்டு உள்ளது என்பதையும், இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்."

TNPSC

## Group I Services தொகுதி 1-இல் அடங்கிய பதவிகளுக்கு நேரடி நியமனம் முதல் நிலைத் தேர்வு (Preliminary Examination)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தன்னுடைய விளம்பர எண்:55-இல் தொகுதி 1-இல் (Group I Services) அடங்கிய பதவிகளுக்கு நேரடித் தேர்வு மூலம் நியமிக்கப்பட விண்ணப்பங்களை வரவழைத்தது. இப்பதவிகளுக்கு முதல் நிலைத் தேர்வு (Preliminary Examination) நடத்த தேர்வாணையம் முடிவு செய்துள்ளது.

முதல் நிலைத் தேர்வின் நாள் மற்றும் தேதி கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

| நாள் மற்றும் தேதி | நேரம் | தேர்வுத் தாள் |
|---|---|---|
| சனிக்கிழமை 24.2.1990 | காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை | பொது அறிவு முதல் தாள் (கொள் குறி தேர்வு) (Objective Type) |
| | பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை | பொது அறிவு, இரண்டாம் தாள் (விரிவுரை மற்றும் சிறு குறிப்புகள்) (Descriptive Type) |

தேர்வுக் கூட அனுமதிச் சீட்டு (Hall-Ticket) தேர்வுக்கான இடம், நேரம் முதலியவற்றை தேர்வுக்கு பத்து தினங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே அனுப்பப் படும். தேர்வு நாளுக்கு ஒரு வாரம் முன்னதாக தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள், ஏற்கனவே விண்ணப்பத்துடன் அனுப்பிய நிழற்படத்தின் மற்றொரு நகல் நிழற்படத்துடன் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

DIPR/173/MS/90/ARIES

**பயன் அடைந்தோர் பகர்வன:**

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம்:**

### கோயம்புத்தூர் மாவட்டத்தில் ...

# 125 ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி

கோவையில் 8.12.1989 அன்று தமிழக அரசின் முன்னோடிச் சமுதாய நலத் திட்டமான, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், 125 ஏழைப் பெண்களுக்குத் தலா ரூ. 5,000 உதவித் தொகை, மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களால் வழங்கப் பட்டது.

கோவை ஆர்.எஸ்.புரம் மாநக ராட்சி கலையரங்கில் நடைபெற்ற இவ் விழாவிற்கு, மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமன், இ.ஆ.ப., தம் வரவேற்புரையில் ''மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், கோவை மாவட்டத்தில் 700 ஏழைப் பெண்களுக்கு ரூ.5,000 வீதம் நிதி உதவி வழங்க ஆணை பெறப்பட்டு உள்ளது. இதுவரை 417 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் தனது தலைமையுரையில், ''இதுவரை தமிழ்நாட்டில் இத்திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 14,500 ஏழைப் பெண்களுக்குத் திருமணம் நடந்தேறியுள்ளது, பெண்கள் முன் னேற்றத்திற்காகத் தமிழக முதல்வர் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்'' என்றார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 125 பெண்களுக்கும் ரூ.5,000க்கான காசோலையை வழங் கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தனது விழாப் பேருரையில்,

''ஒரே நாளில் நூற்றுக்கணக்கான மணப் பெண்களுக்குத் திருமண நிதியுதவி அளிப்பது என்பது சாதாரண காரிய மல்ல. இந்தத் திட்டம் பற்றி முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த பின்பு தான் தற்போது இதன் பயனை அறிய முடிகிறது. பொதுவாக, பெண் சமூகம் உரிமையை இழந்துள்ளது. இதனால் நாட்டின் முன்னேற்றத்தில் பெண்கள் பங்கு வெகுவாகக் குறைந்து விடுகிறது. பெண்ணுரிமை பற்றி பாரதியாரும், பாரதிதாசனும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவை நடைமுறையில் சாத்திய மாகவில்லை. ஏழைகள் வீட்டில் பெண் கல்வியை அலட்சியப்படுத்து கிறார்கள். தமிழக அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், நிதியுதவி பெற பெண்களின் குறைந்த பட்சக் கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு என்று கலைஞர் அறிவித்திருப்பதே, ஏழைக் குடும்பத்துப் பெண்கள் அடிப்



**TNPSC** Advt No **2/90**

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002

**அரசு ஊழியர்கள் மற்றும் இதரர்களுக்கான சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் மே 1990.**

அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் அடுத்த சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் (Special and Departmental Tests) 1990-ஆம் வருடம் மே மாதம் 5-ஆம் தேதி சனிக்கிழமை முதல் 1990-ஆம் வருடம் மே மாதம் 21-ஆம் தேதி திங்கட்கிழமை வரை நடைபெறவிருக்கின்றன. தேர்வாணைய அலுவலகத்திற்கு இதற்கான விண்ணப்பங்கள் வந்து சேர்வதற்கான கடைசித் தேதி 28.2.1990 ஆகும். இதற்கான முழு விவரங்களையும் அதற்கான விண்ணப்பப் படிவங்களையும் பெறுவதற்கான கோரிக்கைகள் ரூ.4.60 அஞ்சல் தலையுடன் கூடிய சுயவிலாசமிட்ட (30 × 12 செ.மீ) உறையுடன் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002 அவர்களுக்கு, தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ தாங்கள் எழுத விரும்பும் தேர்வு அல்லது தேர்வுகள் போன்ற விவரத்தைக் குறிப்பிட்டனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் பிற மொழியில் இருப்பின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பினையும் இணைத்தல் வேண்டும். அவ்வாறு ரூ.4.60 அஞ்சல் தலையுடன் கூடிய சுயவிலாசமிட்ட (30 × 12 செ.மீ. ) உறையுடன் வரப்பெறாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா. சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளுக்கான விண்ணப்பப் படிவங்களுக்குத் தனித்தனியாகக் கோரிக்கைகள் அனுப்பப்பட வேண்டும். முன்பு நடைபெற்ற தேர்வுகளுக்காக வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இத்தேர்வுக்குக் கண்டிப்பாக உபயோகிக்கக் கூடாது. இத்தேர்வுகளுக்கெனப் பெற்ற விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து, தேர்வுக் கட்டணத்திற்கான அஞ்சல் ஆணைகளுடன், கையொப்பமிட்ட ஒரே மாதிரியான, புதிய இரண்டு நிழற்படங்களையும் (Photographs) இணைத்து, விண்ணப்பங்கள் நேரடியாகத் தேர்வாணைய அலுவலகத்திற்கு 28.2.1990 அன்று மாலை 5.30 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பப்பட வேண்டும்.

**குறிப்பு:** இவ்விளம்பரம் அரசுப் பணிகளில் புதிதாக நியமனத்திற்கோ அல்லது தற்காலிகப் பணியில் இருப்பவர்களுடைய பணியை நிரந்தரப்படுத்துவதற்காகவோ அல்ல.

DIPR/174/MS/90



படைக் கல்வியைப் பெற ஊக்கம் தர வேண்டுமென்பதால் தான். பெண்களின் உரிமைக்காக அந்தக் காலத்திலேயே பாடுபட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் போலவே, எல்லாப் பெண்களும் உரிமை உணர்வுடன் வாழ வேண்டும்'' என்றார்.

விழாவில் விடுதலைவிரும்பி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு. இராமநாதன், இரா. மோகன், யு.கே. வெள்ளிங்கிரி, கோவை மாநகராட்சி ஆணையர் திரு. ஹேமந்த்குமார் சின்ஹா ஆகியோரும் கலந்து கொண்டு பேசினர்.

-இரா. பா. கார்மேகம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில்

ஏழைகள் வாழ்வு ஏற்றமடையவும், பாமர மக்களின் எண்ணம் ஈடேறவும், உன்னதமான திட்டங்களைத் தமிழக அரசு உருவாக்கி செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

''நம் குழந்தைக்கு, என்று திருமணம் நடக்கும்'' என்று ஏங்கித் தவித்த காலத்தை மாற்றி, ஏழைப் பெண்களுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் மூலம் 5,000 ரூபாயை அரசு இலவசமாக வழங்கி அவர்களின் வாழ்க்கையைப் பொற்காலமாக மாற்றி அமைத்து - சரித்திரம் படைத்து - மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது.



கன்னியாகுமரி மாவட்டத்தில் வில்லுக்குறியைச் சார்ந்த சலவைத் தொழிலாளியான திரு. முத்துக்கருப்பன் தமது மகள் வி.எம். சாந்தி திருமணத்திற்காக உதவித்தொகை கேட்டு விண்ணப்பித்திருந்தார். மணமகன் எம். வேல்முருகன். இவர் வெள்ளமடத்தைச் சார்ந்தவர். இத்திருமண உதவித்தொகைத் திட்டம் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்ததோடு அவர்கள் வாழ்க்கையை வளமடையச் செய்தது.

அவர்களைச் சந்தித்து, இத்திட்டம் பற்றிக் கேட்டபோது, தம்பதியர் கூறியதாவது:

''இந்த அருமையான திட்டத்தைக் கொண்டு வந்து, எங்களைப் போன்ற ஏழை எளியவர்களுக்குத் திருமணம் செய்ய உதவித் தொகை வழங்கும் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இத்திட்டம் ஏழைகள் வாழ்வில் மறுமலர்ச்சி அளிக்கின்ற சிறப்பான திட்டம்.''

த. இளங்கோவன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்

## தஞ்சை செக்கடிமேட்டில் சுடுமண் உருவங்கள் கண்டுபிடிப்பு

சீ. வசந்தி, அகழாய்வாளர்

தஞ்சையில் உள்ள செக்கடிமேடு என்ற இடத்தில் கலையழகுமிக்க சுடுமண் உருவங்கள் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை மேற்கொண்ட கள ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டன.

தஞ்சையில் ஒரு பகுதியான சீனிவாசபுரம் மற்றும் செக்கடி மேட்டில் அகழாய்வு செய்தல் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது அவை கிடைத்தன.

நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் காணப்படும் பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் சுடுமண் உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றினை அடுத்து கி.பி. 7,8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுடுமண் உருவங்கள் சிவப்பு வண்ணத்தில் தர்மபுரி, கோவை ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. கோவையில் போனுவாம்பட்டி என்ற இடத்தில் பல அழகிய கலை நயம் மிக்க சுடுமண் உருவங்கள் சேகரிக்கப்பட்டன. மதுரையில் கேந்தகை என்ற இடத்திலும், காஞ்சிபுரம், உறையூர், திருக்காம்புலியூர், அழகரை ஆகிய இடங்களிலும் சோழர் காலச் சுடுமண் உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாட்டுப்புறக் கலை அழகு கொஞ்சும் சுடுமண் உருவங்கள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது தஞ்சை செக்கடி மேட்டில், கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மராட்டியர் கால சுடுமண் உருவங்கள் சேகரிக்கப்பட்டன. இவற்றில் விநாயகர், ஆயர், போர் வீரன், நந்தி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. விநாயகர் உருவத்தின் கால் பகுதி உடைந்துள்ளது. ஆயர் அல்லது வேணுகோபாலன் உருவம் நின்ற நிலையில் காணப்படுகிறது. போர் வீரனின் உருவம் முழுக்கைச் சட்டை அணிந்து ஆங்கில வீரனின் தோற்றத்தில் உள்ளது. இங்கு கிடைத்த நந்தியின் தலைப் பகுதியும் காணப்படவில்லை. இவை தமிழக சுடுமண் உருவங்களின் வளர்ச்சி, மற்றும் வரலாற்றிற்கு ஒரு மைல்கல் ஆகும்.

**TNPSC**

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## தமிழ்நாடு மருத்துவப் பணியில்

## உதவி அறுவை மருத்துவர் பதவிக்கு நேரடி நியமனம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 8.8.89 தேதியிட்ட தன்னுடைய அறிக்கையில் தமிழ்நாடு மருத்துவப் பணியில் 559 உதவி அறுவை மருத்துவர் பதவிக்கு நேரடித் தேர்வு மூலம் நியமிக்கப்பட விண்ணப்பங்களை வரவழைத்தது. இப்பதவிக்கு முதன்மை எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு நடத்த தேர்வாணையம் முடிவு செய்துள்ளது.

எழுத்துத் தேர்வின் தேதி, மையங்கள் மற்றும் தேர்வுத் தாள் குறித்து கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| **17.2.1990**<br>முற்பகல்<br>*(சனிக்கிழமை)* | **பொது அறிவு**<br>(விரிவாக்கப் பகுதி சிறு குறிப்பு கேள்விகளுடன் அடங்கியது) | **2 மணி நேரம்** |
| **17.2.1990**<br>பிற்பகல்<br>*(சனிக்கிழமை)* | **பாடம்-முதல் தாள்**<br>(இப்பதவியோடு தொடர்புடைய பாடப் பகுதியைப்பற்றிய தாள்) | **3 மணி நேரம்** |
| **18.2.1990**<br>முற்பகல்<br>*(ஞாயிற்றுக் கிழமை)* | **பாடம்-இரண்டாம்தாள்**<br>(இப்பதவியோடு தொடர்புடைய பாடப் பகுதியைப்பற்றிய தாள்) | **3 மணி நேரம்** |
| **தேர்வு மையங்கள்** | **சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி.** | |

எழுத்துத் தேர்வின் முடிவுகளின் வாயிலாக தேர்வாணையம் வாய்மொழித் தேர்வுக்குத் தகுதி பெற்று அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்து, வாய்மொழித் தேர்வு நடத்தப்பட்டு, எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகளில் பெற்ற கூட்டு மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு செய்யப் படுவார்கள்.

தேர்வு அனுமதிக் குறிப்பாணை (கூட நுழைவுச் சீட்டு) விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுத்தேதிக்குபத்து நாட்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படும். தேர்வு நாளுக்கு ஏழு நாட்களுக்கு முன் அனுமதிக் குறிப்பாணை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே விண்ணப்பத்துடன் அனுப்பிய நிழற்படத்தின் நகலின் மற்றொரு நிழற்படத்தினை செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002-க்கு விண்ணப்பிக்க வேண்டும்.




### பேரறிஞர் அண்ணா கருத்துமணிகள்: அண்ணா போற்றிய பெருமக்கள் (தொகுதி-1)

தொகுப்பாசிரியர்கள்:
கவிஞர் அ. மறைமலையான்,
புலவர் பெ.அ. இளஞ்செழியன்
வெளியீடு:செய்தி-மக்கள்
தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு
விலை: ரூ. 46 பக்கம்:436.

பேரறிஞர் அண்ணா தமிழ்ப் பேரொளியாக விளங்கியவர்; அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டி மகிழ்ந்தவர். அகில உலகமும் போற்றிப் புகழும் அருந்தமிழ்ப் படைப்புகளை வழங்கியவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்துமணிகள் காலக் கண்ணாடியாக விளங்குபவை. அத்தகைய நலமணிகள் இந்நூலில் அழகுறத் தொகுத்து, பகுத்துத் தரப்பட்டுள்ளன. தமிழகம் தந்த பெருமக்கள் அனைவரையும் தாய்மனங்கொண்டு அரசியல் கருத்து வேறுபாடு பாராது அண்ணா போற்றிச் சிறப்பித்துள்ளார்.

இந்நூல் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை: 1. சான்றோர்கள்-பாவலர்கள்-நாவலர்கள், 2. இந்திய விடுதலை இயக்கப் பெருமக்கள், 3. திராவிட இயக்கப் பெருமக்கள், 4. சமூக நலப் பெருமக்கள், 5. பிற அரசியல் கட்சிப் பெருமக்கள், 6. கலையுலகப் பெருமக்கள்.

நூலின் தொடக்கத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை ஏடு சில வரிகளில் கச்சிதமாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

முதற் பகுதியில், திருவள்ளுவரில் தொடங்கி, உடுமலை நாராயணகவி முடிய சான்றோர்கள் சிறப்பித்துக் கூறப்படுகிறார்கள்; இரண்டாம் பகுதியில், வ.உ. சிதம்பரனார், மூதறிஞர் இராஜாஜி என்று தொடங்கி சங்கரலிங்கனார் வரை இந்திய விடுதலை இயக்கப்போர் நினைவுகூரப்படுகிறது; மூன்றாம் பகுதியில், சர்.பி. தியாகராயர், தந்தை பெரியார் முதல் தமிழக முதல்வர் கலைஞர் வரையிலான திராவிட இயக்கப் பெருமக்களின் பெருமை பேசப்படுகிறது; நான்காம் பகுதியில், இராசா சர் அண்ணாமலை செட்டியார், ஜி.டி. நாயுடு, என். சிவராஜ், துறவி இராமசாமி அடிகள் ஆகிய சமூகநலப் பெருமக்களின் சிறப்பியல்புகள் சித்திரிக்கப்படுகின்றன; ஐந்தாம் பகுதியில் காயிதே மில்லத், ப. ஜீவானந்தம் ஆகிய பிற அரசியல் கட்சிப் பெருமக்களின் தொண்டுகள் பாராட்டப் பெறுகின்றன; ஆறாம் பகுதியில், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் முதல் காருகுறிச்சி அருணாசலம் முடிய கலையுலகப் பெருமக்களின் தொண்டுகள் கூறப்பட்டுள்ளன.

இந்நூல், படித்துப் பயன்பெற வேண்டிய-பாதுகாக்கப்பட வேண்டிய பைந்தமிழ்ப் பெட்டகமாகும். இப்படிப்பட்ட அரிய நூலை தமிழக அரசு உருவாக்கியுள்ளது. அரசின் உதவியுடன் இந்நூல் அருமையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூல், அண்ணா, சதுக்கம், சென்னை-5, தமிழரசு அலுவலகம், சென்னை-2, மாநிலச் செய்தி நிலையம், சென்னை-2, வள்ளுவர் கோட்டம், சென்னை-34, மற்றும் எல்லா மாவட்டங்களிலும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களிலும் கிடைக்கும்.

-பி.வி. கிரி.

### மழலை மொழி

ஆசிரியர்:கவிஞர் தமிழ்முடி
வெளியீடு:தமிழ்முடி நிலையம்
எச்.10, கே.
பொன்னம்பலம் சாலை,
கே.கே. நகர்,
சென்னை-78.
விலை ரூ6.50 பக்கம் 64.

சின்னஞ் சிறு குழந்தைகள் படித்து மகிழ்வதற்கு ஏற்ற வகையில் 34 கவிதைகள் கொண்ட கவிதை மாலையாக இந்நூல் விளங்குகிறது.

தேசியக் கொடி, பொங்கல் திருநாள், காந்தித் தாத்தா, சித்திரையும் செடியும், நேரு எங்கள் நேரு ஆகிய தலைப்புகளில் உள்ள கவிதைகள் அருமை.




'கழுதைக்கும் கடிவாளம்!' என்னும் கவிதையில் உள்ள,

'ஆயா குழந்தையை வளர்த்தாலும்
தாயாய் ஆக முடியாது!'

என்னும் வரிகள் எண்ணி எண்ணி மகிழத் தக்கன.

-தமிழ்ப்பித்தன்.

### சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்

ஆசிரியர்: டாக்டர் அரங்க. சீனிவாசன்
வெளியீடு: மகாசக்தி பதிப்பகம்
61, மூன்றாவது மாடி
16, சுங்குராமத் தெரு
சென்னை-600 001
விலை:ரூ. 28 பக்கம்:224

இந்திய விடுதலைப் போரில், ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ச்சி, கறுப்பு மையினால் எழுதப்படும் ஒரு துயர நிகழ்ச்சியாகும். சர் மைக்கேலின் ஆட்சியில் ஜெனரல் டையர் நடத்திய கொடுமை கண்டு உலகமே கண்ணீர் வடித்தது; கண்டனக் குரல் எழுப்பியது.

> மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல அறிவை வளர்த்துக் கொண்டு பயன்பெற வேண்டும்.
>
> *
>
> பெருந்தன்மையோடு கூடிய பொது வாழ்வு வெற்றியையன்றி வேறெதையும் தந்திடாது.
>
> *
>
> கலை என்பது நெறி, முறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் என்னும் பண்புகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
>
> – பேரறிஞர் அண்ணா

அன்று நடந்த அந்த தியாக வரலாற்றை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது இந்த நூல்.

பாரதத்தின் பழம் பெருமையிலிருந்து தொடங்கி, அன்றைய பஞ்சாப்பின் ஆட்சி அமைப்பையும் நிலவரத்தையும் கூறி, ரௌலட் சட்டம் பற்றிக் கோடிட்டுக் காட்டி, விடுதலைப் போரில் வீர மரணமடைந்த வீரர்களைக் கண் முன் கொண்டு வந்து நம்மை அக்காலச் சூழலுக்கே அழைத்துச் செல்கிறார் நூலாசிரியர்.

இளந் தலைமுறையினர் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய தியாக வரலாறு இது.



முதல் அட்டை சொல்லும் செய்தி :



# திருவள்ளுவர் திருநாள்

திருவள்ளுவர் திருநாள் 15-1-90 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சிறப்புற நடந்தது.

மங்கள நல்லிசையுடன் விழா தொடங்கியது. தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

## வாழ்வுக்கு வழிகாட்டி

''வள்ளுவன்போல் கருத்துச் செறிவு மிக்க புலவன் இதுவரை தோன்றியதில்லை. இந்தச் சமூகம் ஒற்றுமையடைய வள்ளுவர் குறள் ஒவ்வொருவரின் வாழ்வோடு இணைந்த நிலை உருவாக வேண்டும். திருக்குறளை வாழ்வோடு இணைக்க, அதை ஒரு மதமாக மாற்ற வேண்டும் என்பர் சிலர். இந்த நூற்றாண்டில் சமயம் உருவாவது சாத்தியமில்லை. வள்ளுவனின் கருத்துக்களை வாழ்வோடு கடைப்பிடித்தால் அது வழிகாட்டியாய் அமையும்.''

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசுகையில். ''வள்ளுவர் தாம் எழுதிய ஒரே நூல் மூலமாக இன்னும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்'' என்றார்.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள் பேசுகையில், ''திருக்குறள் ஒரு விளக்கு போன்றது. இதில் இல்லாதது எதுவும் இல்லை'' என்றார்.

புதுக்கல்லூரித் தமிழ் முதுகலைத் தலைவர் திரு. ச. அமீது அவர்கள் பேசுகையில்,



"குறள் உலக மக்களுக்காகப் பாடப்பட்ட நூல்" என்றார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மூதறிஞர் வ. சுப. மாணிக்கம், வழக்குரைஞர் திரு. கு.சி. ஆனந்தன் ஆகியோர்க்குத் திருவள்ளுவர் விருது வழங்கியும், சிறந்த நூல்கள் எழுதிய எழுத்தாளர்களுக்குப் பரிசுகள் வழங்கியும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 17 பேருக்கு நிதியுதவி வழங்கியும் சிறப்புரை ஆற்றினார்.

மறைந்த தமிழறிஞர் டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் சார்பில் அவரது துணைவியார் திருமதி ஏகம்மை அவர்கள் விருதினைப் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

திருவள்ளுவர் திருநாளை - திருவள்ளுவருடைய பெயரால் விருதுகள் வழங்கி - திருவள்ளுவர் கோட்டத்திலே நடத்துகின்ற இந்தப் பெருமையை எண்ணியெண்ணி நான் மகிழ்ச்சியடைந்து உங்கள் அனைவருக்கும் தமிழர் திருநாள் பொங்கல் வாழ்த்துக்களை முதற்கண் கூறிக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் பொங்கல் வாழ்த்துக் கூற வந்தவர்களில் ஒருவராக வந்து நின்ற அவ்வை நடராஜன் அவர்கள் - எனக்கு மாலை அணிவித்துவிட்டு - காலையிலே 9 மணிக்கெல்லாம் கடற்கரைச்சாலைக்கு வந்து விடுகிறீர்களா என்று கேட்டார். எதற்கு என்றேன். வள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கத்தான் என்றார். வள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிப்பது என்றால் - வள்ளுவர் கோட்டத்திலே இருக்கின்ற வள்ளுவர் சிலைக்கு அல்லவா மாலை அணிவிக்க வேண்டும் என்றேன். உடனே அவர் மகிழ்ச்சி அடைந்து ஓ, அதை மறந்து விட்டேனே என்றார். அவ்வைக்கு திருவள்ளுவரை - வள்ளுவர் கோட்டத்தை மறக்கின்ற நிலை வரலாமா? என்று நினைத்துக் கொண்டேன். சொல்லவில்லை.

வள்ளுவர் கோட்டத்தில் கடந்த சில திங்கள்களுக்கு முன்பு நுழைகின்ற வாய்ப்பினைப் பெற்று - தமிழ் மக்களால் அந்த வாய்ப்பினைப் பெற்று - வள்ளுவர் கோட்



டத்தில் நாங்கள் பார்த்துப்பார்த்துஒவ்வொரு நாளும் நோக்கி நோக்கி அமைத்த வள்ளுவர் பெருந்தகையின் சிலைக்கு மாலை அணிவித்து, அவருடைய பெருமையைப் போற்றுகின்ற நிகழ்ச்சியை இன்று காலையிலே வள்ளுவர் கோட்டத்தில் நடத்தினோம். நானும் பேராசிரியர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் தமிழ்ச் சான்றோர் பலரும் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டபோது- இந்தப் படிகளிலே ஏறி அந்தத் தேர்த் தட்டுக்குச் செல்கின்ற வழியிலே வள்ளுவர் சிலைக்கு அருகாமையிலே இருந்து இசையோடு ஒலித்துக் கொண்டிருந்த குறட்பாக்கள் எங்கள் செவி வழி நுழைந்து சிந்தையிலே தேன்மழை பொழிந்தது. அப்போது நான் பேராசிரியரிடம் சொன்னேன். அவ்வை நடராஜனிடமும், நண்பர்களிடமும் சொன்னேன்.

## வள்ளுவர் கோட்டத்தில்

## நாள்தோறும் குறளிசை!

இந்த நிகழ்ச்சியிலே நான் கேட்கின்ற இந்தக்குறள் இசை ஒவ்வொரு நாளும் வள்ளுவர் கோட்டத்திலே கேட்டுக் கொண்டிருந்தால் எவ்வளவு நேர்த்தியாக இருக்கும் என்று சொன்னேன். புன்னகை புரிந்தவாறு பேராசிரியரும் அதை உடனடியாக ஏற்றுக் கொண்டார். ஒரு நாள் குறிப்பிட்டு - அந்நாள் முதல் ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் இந்த வள்ளுவர் கோட்டத்திலே குறள் இசை ஒரு குறிப்பிட்ட நேரம் வரையிலே ஒலிக்க வழிவகை செய்யப்படும் என்பதையும், இந்த வழியாகச் செல்கின்றவர்களுக்காவது தமிழ் உணர்வை வள்ளுவருடைய - அந்தத் திறனை - அவன் போதித்த அந்த அறத்தை - அவன் காட்டிய அரசியல் நெறியை நினைவுபடுத்தும் என்ற அளவிலாவது அது பயன்படும் என்பதற்கு - அந்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை இந்த இனிய விழாவிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று திருவள்ளுவர் விருது இருவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஒருவர்- இங்கு உடலால் இல்லாமல் உள்ளத்தால்- உணர்வால் நம்மோடு இருப்பவர் தமிழ்ப் பெரியார் - வ.சுப. மாணிக்கம் அவர்கள். வ.சுப. மாணிக்கம் அவர்கள் தமிழின் பாலும், தமிழ் இன உணர்வின் பாலும் எப்படி தன்னை ஒப்படைத்துக் கொண்டிருந்தவர் என்பதற்கு உங்களிடையே நான் சான்றுகள் பல பகர வேண்டிய நிலையிலே நீங்கள் இல்லை. அவரை முழுதும் உணர்ந்தவர்கள் பெரும்பாலோர் இங்கிருக்கிறீர்கள்.

## சிறந்த நூல்களுக்கான

## பரிசுத் தொகை

## திருவள்ளுவர் விருதுக்கான

## தொகை உயர்வு!

"பல்வேறு தலைப்புகளிலே புத்தகங்களை எழுதுகின்றவர்களுக்குப் பரிசுகளை வழங்குகின்ற ஒரு திட்டம் 1971-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அப்படி தொடங்கிய போது சிறந்த புத்தகங்களுக்கு முதல் பரிசாக இரண்டாயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக ஆயிரம் ரூபாயும் என்று அறிவிக்கப்பட்டு, இருபதாண்டுக் காலமாக அதுவே நடைமுறையிலே இருந்து வருகின்றது.

இன்றைக்கு தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் சார்பாகச் செய்யப்பட்டு உள்ள பரிந்துரை இருபதாண்டுக்காலமாக முதல் பரிசுரூ.2,000 என்றும், இரண்டாம் பரிசு ரூ.1,000 என்றும் இருக்கின்றது, அதனை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டார்கள்.

நானும் கல்வி அமைச்சரும் இது குறித்து கலந்து பேசினோம்.நியாயமாக கல்வி அமைச்சர்தான் நிதியமைச்சரோடு கலந்து பேச வேண்டும். ஆனால் நானும் பேராசிரியரும் அப்படி எங்கள் பணிகளைப் பகிர்ந்து கொண்டவர்கள் அல்ல என்பது எங்களைப் பகுத்திட நினைப்பவர்களுக்குப் புரிய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன் - நான் பேராசிரியரை இந்த மேடையிலே கலந்து பேசி அவரிடத்திலே அதுபற்றி கருத்துக் கேட்டு, அந்த இரண்டாயிரம் ரூபாய், ஆயிரம் ரூபாய் என்கிற முதல் பரிசும், இரண்டாம் பரிசும் என்கின்ற அந்தத் தொகைகளை உயர்த்தி, இனிமேல் முதல் பரிசு ஐயாயிரம் ரூபாய் என்றும், இரண்டாம் பரிசு மூவாயிரம் ரூபாய் என்றும், மூன்றாம் பரிசு என்று ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தி அதற்கு ஆயிரம் ரூபாய் என்றும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே திருவள்ளுவர் விருது பத்தாயிரம் ரூபாய் என்பது அடுத்த ஆண்டு முதல் இருபதாயிரம் ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

-திருவள்ளுவர் திருநாளில்
மாண்புமிகு முதல்வர் அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து
(15-1-90).

அவருடைய அருமைத்துணைவியாரும், அவருடைய குடும்பத்தினரும் அவருக்கென வழங்கப்பட்ட அந்த விருதினைப் பெற்றிட மேடைக்கு வந்தபோது அவர்களுடைய கண்கள் மாத்திரமல்ல. நம்முடைய கண்கள் எல்லாம் குளமாயின. அவர்கள் இன்னும் பல ஆண்டுக்காலம் நம்மோடு இருந்திருப்பாரேயானால், அவருடைய துணை கொண்டு இந்த அரசின் சார்பில், தமிழுக்கு நாங்கள் செய்ய வேண்டிய தொண்டுகள் பலவற்றைத் திறம்படச் செய்திருக்க முடியும். அந்தப் பெரும் வாய்ப்பை நாங்கள் இழந்து விட்டோமென்றாலுங்கூட, எனக்கு இன்னமும் ஒன்று நினைவிருக்கின்றது.

### மாணவர்க்கு

**குறளைக் கற்றுக் கொள்வதால்,**
**நீங்கள் செம்மைப்பட்டு,**
**நீங்கள் செம்மைப்படுவதால்,**
**நாடு செம்மைப்பட்டு,**
**நாடு செம்மைப்படுவதால்,**
**உலகு செம்மைப்படச் செய்ய வேண்டும்.**



### தலைநிமிர்ந்து நடக்கும் நிலை

அவர்கள் மறைவதற்கு ஒரு கிழமைக்கு முன்பு ஒருநாள் காலைப்பொழுதில் என்னை இல்லத்திலே வந்து சந்தித்தார். அவரை வரவேற்று மகிழ்ந்தபோது அவர்கள் சொன்னார்கள். 'எந்தப் பயன் கருதியும் நான் உங்களைச் சந்திக்க வரவில்லை, பரிந்துரை ஏதாவது செய்வதற்காகவும் நான் இங்கே வரவில்லை, ஒன்றைச் சொல்லத் தான் வந்தேன்' என்று சொன்னார். ''என்னய்யா?'' என்று கேட்டேன், வழக்கமாக அவரிடம் காட்டுகின்ற மரியாதையோடு. அதற்கு அவர், ''சில நாட்களாக நாங்கள் தலைநிமிர்ந்து நடக்கிறோம் அய்யா-அது போதும் எங்களுக்கு, வேறு எந்தப் பயனும் தேவையில்லை. என்னைப் போன்றவர்கள் தலைநிமிர்ந்து நடக்கக்கூடிய ஒரு நிலை இன்றைக்குத் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றதே, அது போதும்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

அதே நிமிர்ந்த தலை - அதே நேர்மையான நெஞ்சம் - இந்தத் தமிழுக்காகவே வாழ்ந்த தமிழன் இன்றைக்கு நம்மை விட்டுப் பிரிந்து விட்டாரென்றாலும் அவர் உருவாக்கிய உணர்வுகள், அவர் ஆற்றிய தொண்டு, நாள்தோறும் அவர்கள் சிறப்புறச் செய்திட்ட செந்தமிழ்ப் பணி - நம்மை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி, தமிழுக்கும் தமிழ் நிலத்திற்கும் வெற்றிகளைத் தேடித் தர துணை நிற்கும் என்ற அளவில், அந்தத்தன்னலத்தை எதிர்பார்த்துத்தான், அவருடைய குடும்பத்தாரிடம் அவருக்கான விருதினை அரசின் சார்பில் வழங்கியிருக்கிறோம்.

அடுத்து திருவள்ளுவர் விருதினை என்னுடைய அன்பிற்குரிய நண்பரும், இந்த இயக்கத்திலே இளமைக் காலந்தொட்டு, தன்னை ஒப்படைத்துக் கொண்டிருப்பவரும், தமிழுக்கு தொடர்ந்து தொண்டாற்றி வருபவரும், பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே பேரன்பையும், பேராசிரியர் அவர்களிடத்திலே நல்ல மதிப்பினையும் பாசத்தையும் பெற்றுத் திகழ்பவருமான ஆனந்தன் அவர்கள் இங்கே பெற்றிருக்கின்றார்கள். அவர்கள் பல நூல்களை தமிழர்கள் விழிப்புறவும், மக்களாட்சியின் மாண்பு தழைக்கவும் எழுதியிருக்கின்றார்கள். திருக்குறளை பல கோணங்களிலே ஆய்ந்து அரிய நூல்களை யாத்திருக்கின்றார்கள். அவர் இந்த விழாவிலே விருது பெற்றிருக்கின்றார்.

பல்வேறு தலைப்புகளில் பல்வேறு கோணங்களில் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி பல்வேறு செய்திகளை எழுத்தாரங்களாகத் தந்திருக்கின்ற பலர் இங்கே விருது வழங்கப்பட்டு நம்முடைய பாராட்டுக்களையெல்லாம் பெற்றிருக்கின்றார்கள். அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் வழங்குகின்றேன்.

குறிப்பாக என்னுடைய சகோதரர் அரங்கண்ணல் அவர்கள் இங்கே பரிசு பெற்றிருக்கின்றார். அவர் அறிஞர் அண்ணா அவர்களுடைய அருகாமையிலே இருந்து திராவிட நாடு, காஞ்சி இதழ்களில், ஏன் அதற்கு முன்பு தந்தை பெரியாரோடு அமர்ந்து விடுதலை இதழில் கட்டுரைகளைத் தீட்டியவர். நல்ல செய்திகளை தமிழ் மக்களுக்காகத் தந்தவர். அவருடைய நீண்ட கட்டுரைகள் - அவர் எழுதிய விரிவான நூல்கள் - மற்றவர்களுக்குப் பயன்படக் கூடியவைகளாக அமைந்தவை. அவர்கள் இன்று பரிசு பெற்றிருக்கிறார்கள். நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இந்த விழாவிற்கு வந்தது குறித்து பேராசிரியர் அமீது அவர்கள் பேராச்சரியம் தெரிவித்து, அவருக்குப் பாராட்டுக் கூறினார். நானோ, பேராசிரியரோ சொல்லியிருக்க வேண்டியதை அமீது சொன்னார் என்றால், எங்களை முந்திக் கொண்டு சொன்னார் என்றல்ல, இங்கே அமர்ந்திருக்கும் உங்கள் அனைவரது உள்

ளங்களிலும் என்ன இருக்கிறதோ அதை அமீது எதிரொலித்தார் என்பதுதான், உண்மை.

### தமிழ் உணர்வு ஒன்று சேர்க்கும்

இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் சட்டப் பேரவையிலே எதிர்த்து வாதாடினாலும், பொது மேடைகளிலே மாலை நேரத்து மேடைகளிலே கருத்து மாறுபாடுகள் எனக்கும் அவருக்கும் உண்டு என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னாலும் - அவருடைய சொற்கள் எப்போதும் அழுத்தந்திருத்தமாகத்தான் வரும் என்பது உங்களுக்குத் தெரியும் - அரசியல் உணர்வுகள் எங்களைப் பிரித்து எடுத்தாலும்கூட, அவைகளை எல்லாம் குப்புற வீழ்த்தி விட்டு, தமிழ் உணர்வு உங்களை ஒன்று சேர்க்கும் என்பதற்கு அடையாளமாகத்தான் இங்கு வந்துள்ளார். அவருக்கு விருது வழங்குகின்றோம் - என்று நாங்கள் அறிவிக்காமல் கூட, அவர் வராமல் இருந்திருக்கலாம் - வருவதை விட வராமல் இருப்பதுதான் இப்போது பெரிய செய்தி நாட்டிலே - திருமணங்களிலே கூட நீங்கள் பார்க்கலாம். வந்தவர்களுடைய பெயர்களை எல்லாம் பெரும்பாலும் பத்திரிகைகளிலே போட மாட்டார்கள். தந்தி மூலம் வாழ்த்தியவர்களின் பெயர்கள் எல்லாம் பத்திரிகைகளிலே வெளிவரும் - ஆனால் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் நிகழ்ச்சிக்கு வந்து 'நாம் எல்லோரும் தமிழர்கள்' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடலுக்கு இலக்கண இலக்கியம் வகுத்திருக்கின்றார்.

*''வெள்ளம் போல் தமிழர் கூட்டம் - வீரம் கொள் கூட்டம் - உள்ளத்தால் ஒருவரே - மற்றும் உடலினால் பலராய்க் காண்பர் - கள்ளத்தால் நெருங்கொணாதே என வையம் கலங்கக் கண்டு களிக்கும் நாள் எந்நாளோ?''*

—என்ற பாவேந்தரின் பாட்டுக்கு இலக்கணமாகத் திகழ்கின்ற அருமை நண்பர் இலக்கியச் செல்வர் அவர்களை நான் மனமார வாழ்த்துகின்றேன்.

### பரிசு பெற்ற எழுத்தாளர்கள் அனைவருக்கும் பாராட்டு!

மற்றும் அரிமதி தென்னகன், காவல் துறையிலே பணி புரிந்தாலும், தமிழுக்குக் கடமையாற்ற வேண்டுமென்று முன் வந்த திலகவதி, மனசை கீரன், வாசவன், மற்றும் எழுத்தாளர்கள் எல்லாம் பாராட்டுக்குரியவர்கள். குறிப்பாக என்னுடைய அருமை நண்பர் அறந்தை நாராயணன் தமிழ் நாட்



## எனது தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் ஆசான்கள்

தமிழ்மொழியை- என் கல்லூரி வாழ்வில் முறையாக நான் கற்கவில்லை. கல்லூரியிலிருந்து வெளியேறியபோது, தமிழைக் கற்க நான் முயற்சி எடுத்துக் கொண்டது உண்டு.

இண்டர்மீடியட் வகுப்போடு தமிழ்க் கல்வி நாங்கள் இருந்தபோது முற்றுப் பெற்றுவிட்டது. அதற்குப் பிறகு ஆங்கில மொழியில் எண்ணிடும் அளவிற்கு அமைந்த ஆங்கிலக் கல்வியே எனக்குக் கிடைத்தது.

நான் கல்லூரியில் பயின்றபோது, தமிழ் வகுப்பு என்பது ஓய்வுக்குரிய நேரமாகக் கருதப் பட்டது.

தமிழ் வகுப்புக்குச் செல்லாமல், நூலகத் திற்குச் சென்று- சரித்திர ஏடுகளையோ- கணக்கு ஏடுகளையோ புரட்டிப் பார்ப்பதுதான் திறமையான மாணவனுக்கு அடையாளம் என்று கருதப் பட்டு வந்தது.

அப்போது கூட எனக்கு மிகவும் சுவையும் பயனும் அளித்த வகுப்பு, தமிழ் வகுப்புதான். எனது தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் தமிழ் ஆசான்களில் ஒருவர் மோசூர் கந்தசாமி முதலியார். அவர் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டிலும் புலமையுடையவர். அவரது வகுப்பில் 40 நிமிடம் ஆங்கிலமும், 20 நிமிடம் தமிழும் நடமாடும். தமிழ்க் கவிதைக்கு நிகரான-அல்லது அதற்கு மேலான ஆங்கிலக் கவிதைகளை எடுத்து உரைத்து, இரண்டையும் அழகுற ஒப்பிட்டுக் காட்டுவார்.

இன்னொரு ஆசான் மணி. திருநாவுக்கரசு என்பவர். அவர் வகுப்பில் ஆங்கிலம் நுழையாது. தமிழின் அடித்தளத்திற்கே சென்று, தமிழ் மொழியின் மாண்பினை எடுத்துக் காட்டி, தமிழ்த்தேனை மாந்தி மாந்தி இன்பம் துலங்கச் செய்வார்.

எனக்கு இப்போது ஏதாவது தமிழார்வம் இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் இந்த இருபெரும் புலவர்கள்தான்!

—பேரறிஞர் அண்ணா

டின் சினிமா வரலாறு குறித்து எழுதிய ஒரு நூலுக்காக இன்று பரிசு பெற்றிருக்கின்றார். அவர் அதனை நூல் வடிவிலே எழுத வில்லை - எனக்குத் தெரியும். தொடர் சித்திரமாக - தொடர் கட்டுரையாக அவர் ஒரு வார இதழிலே எழுதி வந்த தொகுப்புத் தான் அந்த நூல். நான் இந்த நூலைப் படிக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு வாரமும் அந்தக் கட்டுரையைத் தவறாமல் படித் திருக்கிறேன்.

அறந்தை நாராயணன் நான் படித்திருப் பேன் என்று எண்ணியிருக்க மாட்டார். ஒரு வாரம் வராவிட்டால், அது ஏன் வர வில்லை அந்த இதழ் என்று குறிப்பிட்டுக் கேட்கக் கூடிய அளவிற்கு, திரை உலகத்திலே பழங்காலந்தொட்டு, பேசாத படங்கள் வந்த அந்தக் காலந்தொட்டு, இந்தக் காலம் வரை யிலே நவீன உத்திகளுக்கெல்லாம் இடம் அளித்திருக்கின்ற திரை உலகின் வளர்ச்சி குறித்தும் - திரையுலகிலே வாழ்ந்து வளர்ந்து தேய்ந்த கலைஞர்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டும் - அவர் எழுதிய அந்தக் கட்டுரைகளின் தொகுப்பு நூலுக்காக அவர் இன்று பரிசு பெற்றிருக்கின்றார். நல்ல துடிப்பான அவரையும் நான் பாராட்டுகின் றேன். வாழ்த்துகின்றேன்.

## வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை

இந்த இனிய விழாவிலே மற்றொரு அறி விப்பாக - நான் இந்த மேடைக்கு வந்ததும் வள்ளுவர் கோட்டத்து வட்டாரத்திலே உள்ள வியாபாரிகள் சங்கத்தினர் ஒரு கோரிக்கை என்னிடத்திலே வழங்கினார்கள். இந்தக் கோரிக்கையை ஏற்பதில் இங்கே அமர்ந்திருக்கின்ற தமிழர்கள் மாத்திரமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற தமிழர்கள்- ஏன் கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்கள் கூட தயங்க மாட்டார்கள். அவர்கள் கேட்டிருக் கின்ற கோரிக்கை-

''தங்கள் கலைக் கண்ணோட்டத்தில் இன்று பார் புகழும் வள்ளுவர் கோட்டம் எங்கள் தொகுதியில் சிறப்புடன் தமிழின் பெருமையை நாளும் பறைசாற்றிக் கொண் டிருக்கின்றது. இந்தக் கோட்டம் அமைந் துள்ள டேங்க் ரோடு, ரங்கனாதன் ரோடு, வில்லேஜ் ரோடு என்று மூன்று பெயர் களிலே அழைக்கப்படுகின்றது. இதனை வள்ளுவர் கோட்டம் தொடங்கி ஸ்டர்லிங் சாலை வரை ஒரே பெயரில் ''வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை'' என்ற பெயரிலே அழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.''

இதனை ஏற்றுக் கொள்ளலாமா? (ஏற்றுக் கொள்ளலாம், ஏற்றுக் கொள்ளலாம் என்று மக்கள் குரல்) வியாபாரிகள் சங்கத்தின் இந்தக் கோரிக்கையை நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் ஆணையிட்டுத் தெரிவித்திருக்கின்ற காரணத்தால், வள்ளு வர் கோட்டம் தொடங்கி ஸ்டர்லிங் சாலை வரையிலே செல்கின்ற இந்த நெடுஞ் சாலைக்கு ''வள்ளுவர் கோட்டம் நெடுஞ் சாலை'' என்று பெயர் வைக்கப்படும். இதனை ஆட்சியின் வாயிலாகச் செய்ய லாமா? அல்லது மாநகராட்சி மன்றத்தின் மூலமாகச் செய்யலாமா என்பதைச் சிந்தித்து உடனடியாக முடிவெடுக்கப்படும். ஏனென் றால் அவர்கள் மூலமாகத்தான் செய்ய வேண்டுமென்றால் அவர்களை மீற, அவர் களுடைய அதிகாரத்தில் நாங்கள் தலையிட மாட்டோம். யாருடைய அதிகாரத்திலும் தலையிடக் கூடாது என்பது எங்கள் கொள்கை. நாம் தலையிட வேண்டியது திருவள்ளுவரின் அதிகாரங்களே தவிர வேறு யாருடைய அதிகாரத்திலும் அல்ல என்று கூறி அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கிறேன்.''

விழா முடிவில், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. கு. சிவஞானம் அவர்கள் நன்றி கூறினார்.

அமரர் திருச்சி லோகநாதன் திருமகனார் திரு. தி.லோ. மகராசன் குழுவினரின் தென் தமிழ்த் தேனிசை நிகழ்ச்சி நடந்தது.

—நிகழ்ச்சித் தொகுப்பு
பி.வி. கிரி

## திருவள்ளுவர் சிலைக்கு முதல்வர் கலைஞர் மாலை அணிவித்தார்.

திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு 15-1-1990 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாலை அணிவித்தார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்கள் திரு. மு. கண்ணப்பன், திரு. ஆற்காடு வீராசாமி, திரு. துரை முருகன், திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், திரு. டி. இராமகிருஷ்ணன் ஆகியோரும், அரசு அலுவலர்களும் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

# தமிழ்நாடு மின்சார வாரியம்
# வடசென்னை அனல்மின் திட்டம்

## ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) மூன்று நகல்களோடு மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல்-1 மின்னாக்கம் மூன்றாவது தளம், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் பெயர் | : | வட சென்னை அனல் மின்திட்டம் - முதல் கட்டப் பணி - பொதுகட்டடப் பணிகள் தொகுதி இரண்டு (General Building Works Part.II) |
| 2. | ஒப்பந்த வரையறை எண் | : | SECT.I/NMTPP/10 |
| 3. | மொத்த வேலையின் தோராய மதிப்பு | : | ரூ.265 இலட்சங்கள் |
| 4. | பிணை வைப்புத் தொகை | : | ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) |
| 5. | ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும் | : | 1990, பிப்ரவரி 21-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12.00 மணி |
| 6. | தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும் | | 1990, பிப்ரவரி 21 ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி |
| 7. | **ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை** | | |
| | தமிழ்நாட்டிற்குள் | : | ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| | தமிழ்நாட்டிற்கு வெளியே | : | ரூ.550/- (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்) |
| 8. | ஒப்பந்தத்தை அனுப்புதல் | : | இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு. ஒப்பந்தங்கள் ஒப்பந்த வரையறையில் உள்ள செக்ஷன் ஏ3ன் 16வது பிரிவில் கண்டுள்ள விதிகளின்படி அனுப்பப்பட வேண்டும். இவ்விதிமுறைகளுக்கு முரணாக சமர்ப்பிக்கப் படும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும். |

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள் தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை - 600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையைப் பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்தி பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு, மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/ அனல் மின்னாக்கம்-1 அலுவலகத்தில் 20.1.90 காலை 10-30 மணி முதல் 19.2.90 மாலை ஐந்து மணி வரை பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த வரையறை பெறுவதற்கு செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்திற்காகவும் திரும்பத் தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.50/- கூடுதலாக செலுத்த வேண்டும். பொதுவாக, ஒருவருக்கு ஒரே ஒரு ஒப்பந்த வரையறை மட்டும் தான் கொடுக்கப்படும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

பிணைவைப்புத் தொகையன்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்துசேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. விற்பனை செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும் போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

**தலைமைப் பொறியாளர்/பொதுவியல் வடிவமைப்பு**

DIPR/68/MS/90



# கும்மிடிப்பூண்டியில்

# ஓட்டுநர் சிறப்புப் பயிற்சி மைதானம்

செங்கை-அண்ணா மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் 15 ஏக்கர் நிலப் பரப்பில் சுமார் 30 இலட்சம் மதிப் பீட்டில் அமைக்கப்பட்டுள்ள "ஓட்டுநர் சிறப்புப் பயிற்சி மைதானத்தை" மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் 10.1.90 அன்று திறந்து வைத்தார்.

தமிழ்நாடு சாலைப் போக்குவரத்து நிறுவன இயக்குநர் திரு. ஆர். ரத்தின சபாபதி வரவேற்புரையாற்றினார். விழாவிற்கு, கும்மிடிப்பூண்டி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கி. வேணு தலைமையேற்றார். விழாவில் பொன்னேரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. சுந்தரம், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் மதுராந்தகம் திரு. சி. ஆறுமுகம் ஆகியோர் உரை யாற்றினார்கள்.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் ஓட்டுநர் சிறப்புப் பயிற்சி மைதானத்தைத் திறந்து வைத்து அங்கு பயிற்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கிப் பேசினார். அவர் தன் உரையில்,

"இந்தியாவிலேயே முதல்முறையாக ஓட்டுநர்களுக்குச் சிறப்புப் பயிற்சி மைதானம் 30 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாட்டில் கும்மிடிப் பூண்டியில் அமைக்கப்பட்டு உள்ளது. விபத்துக்களைத் தவிர்க்க இதுபோன்ற பயிற்சி மைதானங்களைத் தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகர்களில் அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

"15 நாட்களில் ஓட்டுநர்கள் உரிமம் வேண்டுமா? என்ற விளம்பரங்களுடன் தனியார் ஓட்டுநர்கள் பயிற்சி நிறுவனங்களும் உள்ளன. அத்தகைய நிறுவனங்களில் சேருகிற வர்களுக்கும் சில அதிகாரிகள் ஓட்டுநர் உரிமம் கொடுத்து விடுகிறார்கள். அந்த நிறுவனங்கள் ஓட்டுநர் பயிற்சி அளிப்பதை விட, ஓட்டுநர் உரிமம் வாங்கிக்கொடுக்கும் நிறுவனங்களாகச் செயல்பட்டு வருகின்றன. ஓட்டுநர் பயிற்சி, முறையாகக் கொடுத்து வந்தால் விபத்துக்களைக் குறைக்க முடியும்.

"இங்கு பயிற்சி பெற்ற 2 ஆயிரத்து 700 ஓட்டுநர்களில் ஆயிரம் பேர், தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர்களாக வேலை பார்த்து வருகின்றனர். மற்றவர்கள் வெவ்வேறு நிறுவனங்களில் ஓட்டுநர் களாகப் பணியாற்றுகின்றனர். இங்கு பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு தமிழக அரசு போக்கு வரத்து நிறுவனங்களில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

"விபத்துக்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். 1985-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 24 ஆயிரத்து 500 விபத்துக்கள் நடந்துள்ளன. இதனால், 4 ஆயிரத்து 405 பேர் மரணம் அடைந்துள்ளனர். 1986-ஆம் ஆண்டு 25 ஆயிரத்து 847 விபத்துக்கள் ஏற்பட்டு உள்ளன. 4 ஆயிரத்து 550 பேர் மரணம் அடைந்துள்ளனர். 1987-ஆம் ஆண்டு 27 ஆயிரத்து 58 விபத்துக்கள் நடந்துள்ளன. 4 ஆயிரத்து 850 பேர் மரணம் அடைந் துள்ளனர். 1988-ஆம் ஆண்டு 30 ஆயிரத்து 147 விபத்துக்கள் ஏற்பட்டு உள்ளன. இதனால் 5 ஆயிரத்து 468 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

"1985-ஆம் ஆண்டு இருந்த வாகனங்களைவிட 4 மடங்கு வாக னங்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. 2 சக்கர 'மொபெட்' போன்றவற்றில் செல்பவர்கள் உரிமம் வைத்து இருக்கிறார்களா என்று தெரிவது இல்லை.

"ஓட்டுநர்களுக்கான உரிமம் கொடுக் கும்போது எந்தவிதமான சலுகைகளும் இல்லாமல் தகுதியின் அடிப்படையில் உரிமம் கொடுக்க வேண்டும். மாவட்ட அளவில் விபத்துக்களில் அதிகம் திருச்சி மாவட்டத்தில்தான் ஏற்பட்டு இருக்கிறது. அங்கு 469 விபத்துக்கள் ஏற்பட்டு இருக்கின்றன. 455 பேர் மரணம் அடைந்துள்ளனர். இரண்டாவதாக அதிக அளவில் விபத்துக்கள் செங்கை-அண்ணா மாவட்டத்தில் ஏற் பட்டு உள்ளன.

"எனவே, விபத்துக்களைக் குறைக்க இதுபோன்ற ஓட்டுநர் பயிற்சி நிறு வனங்கள் தேவைப்படுகின்றன. தமிழ் நாட்டில் உள்ள எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் கும்மிடிப்பூண்டியில் இருப்பது போல ஓட்டுநர்கள் பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்படும்.

எந்த கிராமமாக இருந்தாலும் சாலை வசதி இருந்தால், அந்த கிராமத்திற்கு பஸ்களை விட வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது" என்று குறிப் பிட்டார்.

இறுதியில் ஓட்டுநர் பயிற்சிப் பிரிவுத் துணை இயக்குநர் திரு. ஜெ. ஜனார்த்தன் நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்

# தமிழ்நாடு மின்சார வாரியம்
# வடசென்னை அனல்மின் திட்டம்

## ஒப்பந்த விளம்பரம்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காகத், தனித்தனியே அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன.

| வரிசை எண் | வேலையின் விவரம் | விவரக் குறிப்பு | வைப்புத் தொகை | ஒப்பந்த வரையறைப்படிவம் பெற்றுக்கொள்ளும் கடைசி தேதி |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | மூன்று "2 இ" வடிவ அரை நிரந்தரக் குடியிருப்பு (எண்கள் 2,3 மற்றும் 4) கட்டுமானப் பணி அத்திப்பட்டு முகாமில் செய்வது சம்மந்தமாக | சி எஸ்.இ.II 11/89-90 | ரூ.10,000/- | 5-2-90 பகல்12மணி வரை |
| 2. | இரண்டு "4 எப்" வடிவ அரை நிரந்தரக் குடியிருப்பு (எண்கள் 2 மற்றும் 3) கட்டுமானப் பணி அத்திப்பட்டு முகாமில் செய்வது சம்பந்தமாக | சி எஸ்.இ.II 12/89-90 | ரூ.8000/- | 5-2-90 பகல் 12மணி வரை |
| 3. | இரண்டு "எச்" வடிவ அரை நிரந்தரக் குடியிருப்பு (எண்கள் 3 மற்றும் 4) கட்டுமானப் பணி அத்திப்பட்டு முகாமில் செய்வது சம்பந்தமாக. | எஸ்.இ.சி.II 13/89-90 | ரூ.5000/- | 9-2-90 பகல் 12மணி வரை |
| 4. | ஒன்று மட்டும் "8 ஜி" வடிவ அரை நிரந்தரக் குடியிருப்பு (எண் 2) கட்டுமானப்பணி அத்திப்பட்டு முகாமில் செய்வது சம்பந்தமாக. | எஸ்.இ.சி.II 14/89-90 | ரூ.5000/- | 9-2-90 பகல் 12மணி வரை |

ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்த வரையறைப்படிவத்தின் விலை ரூ.100/- தமிழ்நாட்டிற்குள்
ரூ.115/- தமிழ்நாட்டிற்கு வெளியே

ஒப்பந்த வரையறைப்படிவம் 24-1-90 முதல் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவம் கடைசித் தேதியில் திறப்பதற்கு முன்னாள் மாலை 4 மணிக்குப் படிவம் கொடுப்பது நிறுத்தப்படும்.

ஒப்பந்த வரையறைப் படிவம் வேண்டுவோர் அந்தந்த வேலைக்கு மேலே குறிப்பிட்ட தொகையைப்பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ விளக்க விபர எண்ணையும், சுய முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட்டு துணை நிதிக்கட்டுப்பாடு அதிகாரி, வடசென்னை அனல்மின் திட்டம், எண்ணூர், சென்னை-57 என்ற முகவரியில் செலுத்தி, அவர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அஞ்சல்மூலம் பெறப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தப்படிவத்திற்கு ரூ.15/- அதிகம் செலுத்த வேண்டும். அஞ்சல் மூலம் அனுப்பப்படும் ஒப்பந்த வரை படிவங்கள் உரியவருக்குச் சேராவிட்டாலோ, தாமதமாகப் போய்ச் சேர்ந்தாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒப்பந்த வரையறைப் படிவங்களில் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்த வரையறைப்படிவங்களும், மேற்குறிப்பிட்ட நாள் நேரத்திற்குள் சமர்ப்பிக்கப் பெறாத ஒப்பந்த வரையறைகள் திறக்கப்படமாட்டாது.

சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்த வரையறைகள் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் வந்தவர்கள் முன்னிலையில் பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த வரையறை ஏற்கும் அதிகாரி எந்த ஒப்பந்த வரையறைகளையும் பிரிக்கவோ அல்லது எந்த ஒரு காரணமும் காட்டாது நிராகரிக்கவோ உரிமை பெற்றவராவர். ஒப்பந்தக்காரர்கள் வைப்புத் தொகையைக் குறிப்பிட்ட தேதியில் காலை 12.00 மணிக்குள் செலுத்திவிட வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்/பொது II
வடசென்னை அனல் மின்திட்டம்
எண்ணூர், சென்னை-57

டிஐபிஆர்/23/செ.அ/90/ஏடிடி

# கோவை மாவட்டத்தில்...

## ஆதிதிராவிடர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா

கோவை மாவட்டத்தில் மலுமிச்சம்பட்டி கிராமத்தைச் சார்ந்த 500-க்கும் மேற்பட்ட ஆதி திராவிட கிறிஸ்துவர்கள் 1974-ஆம் ஆண்டு முதல் குடிசைக்கு வழியின்றி, அரசு மூலம் வீடுகட்ட நிலம் கேட்டு மனு தந்த வண்ணம் இருந்து வந்தனர். கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக இவர்களின் கோரிக்கை இருந்து கொண்டே வந்தது.

தற்போது இவர்களின் கோரிக்கையை ஏற்று மலுமிச்சம்பட்டியில் 25 ஏக்கர் நிலத்தை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. இராமன், இ.ஆ.ப. அவர்கள் கையகப்படுத்தி, 549 ஏழைக் குடும்பத்தினருக்குப் பட்டா வழங்கியுள்ளார்.

## தனியார் கூட்டுறவுகள் நடத்திய ரேசன் கடைகள் அரசு ஏற்பு

கோவை மாவட்டத்தில் தனியார் கூட்டுறவு அங்காடிகள் மூலம் செயல்பட்ட 102 ரேசன் கடைகளை அரசு ஏற்று உள்ளது. இதற்கான நடவடிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமன், இ.ஆ.ப. அவர்கள் எடுத்து இருக்கிறார்.

கோவை மாவட்டத்தில் தனியார் கூட்டுறவு அங்காடிகள் மூலம் 102 ரேசன் கடைகள் செயல்பட்டு வந்தன. அவைகளில் அத்தியாவசியப் பொருட்கள் சரிவரக் கிடைப்பது இல்லை என்ற புகார்கள் பொதுமக்களிடம் இருந்து வந்தன. அதைத் தொடர்ந்து அதிகாரிகளைக் கூட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனை நடத்தினார். கோவை வந்திருந்த மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் இது பற்றி ஆலோசனை நடத்தினார். அதன் பிறகு அந்த 102 ரேசன் கடைகளையும் அரசு ஏற்பது என்று முடிவு செய்யப்பட்டது. இனி அந்த கடைகளை அரசு நிறுவனங்களான சிந்தாமணி கூட்டுறவுப் பண்டக சாலையும், கோவை கூட்டுறவு விற்பனை சங்கமும் நடத்தும்.

## இருதய அறுவைச் சிகிச்சைக்காகத் தமிழக அரசு ரூ.10,000 நிதியுதவி

கோவை மாவட்டத்தில், ஏழ்மையில் வாடும் ஒரு இளம்பெண்ணுக்கு இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள இந்தியப் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000-மும், தமிழக முதல்வர் நிதியிலிருந்து ரூ. 5,000-மும், மேலும் தமிழக முதல்வரின் பரிந்துரையும் கிடைத்துள்ளன.

புஞ்சைப் புளியம்பட்டியில் வசிக்கும் நாவிதர் இனத்தைச் சேர்ந்த இளம்பெண் அமுதா. இவர் இருதய நோயால் கஷ்டப்பட்டு வந்தார். இவருக்குச் சிகிச்சை அளிக்க மொத்தம் 25 ஆயிரம் ரூபாய் தேவைப்படும் என கோவை குப்புசாமிநாயுடு மருத்துவமனையில் பரிந்துரை செய்தனர்.

தன்னுடைய ஏழ்மை நிலையை விளக்கி பிரதமருக்கும், தமிழக முதல்வருக்கும் செல்வி அமுதா, சிகிச்சைக்காக நிதி உதவி கே..ரி, மனு செய்தார். ஆகவே, இந்தியப் பிரதமர் நிதியிலிருந்து ரூ. 10 ஆயிரம் வழங்க உத்தரவிடப்பட்டது. தமிழக முதல்வரின் நிவாரண நிதியில் இருந்து ரூ. 5,000 வழங்க உத்தரவானது.

எனினும், சிகிச்சை பெற மேலும் ரூ. 10 ஆயிரம் தேவைப்பட்டது. இதனைச் சமாளிக்க, தமிழக முதல்வர், கோவை மாவட்ட ஆட்சித்தலைவருக்குப் பரிந்துரை செய்தார். கோவை மாவட்ட ஆட்சித் தலைவர், குப்புசாமி நாயுடு மருத்துவமனையுடன் தொடர்பு கொண்டு மருத்துவச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்.

இதேபோல் கோவை மாவட்டம் திருப்பூர் தாலுக்காவைச் சேர்ந்த திருமதி பாக்யலட்சுமி என்கிற ஏழைத் தாயின் மகள் வசந்தி; இருதய நோயால் வாடும் இப்பெண்ணிற்கு உரிய சிகிச்சை மேற்கொள்ளவும் தமிழக முதல்வர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000 வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சிறு சேமிப்பு வசூல்-தமிழகத்தில் முதலிடம்

தமிழ்நாடு சிறு சேமிப்புத்துறைத் தலைவர் திரு ரகுமான்கான் அவர்கள் அண்மையில் கோவை வருகை புரிந்தார். அப்போது நடந்த செய்தியாளர் கூட்டத்தில் அவர், தமிழ்நாட்டின் சிறு சேமிப்பில் நடப்பாண்டில் கோவை மாவட்டம் முதலிடம் வகிப்பதாகத் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:

''தமிழகத்தில் இந்த ஆண்டு சிறு சேமிப்புத் துறையின் சார்பில் ரூ. 400 கோடி வசூல் செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. இதில் ரூ.125 கோடி வசூலாகி உள்ளது. கோவை மாவட்டத்தின் குறியீடு ரூ. 36 கோடி. இவற்றில் ரூ.26 கோடியே 50 இலட்சம் வசூல் செய்யப்பட்டது.

''தமிழகத்தில் சிறுசேமிப்பிலும் பரிசுக் கூப்பன் விநியோகத்திலும் கோவை மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமன் இ.ஆ.ப., மற்றும் சிறு சேமிப்புத் துறை அலுவலர் திரு.கே. குருசாமி, நேர்முக உதவியாளர்கள் துரைசாமி (ஊரக வளர்ச்சி) கோவிந்தராமானுஜம் (பேரூராட்சி வளர்ச்சி) மற்றும் சிறு சேமிப்புத்துறை ஊழியர்கள் ஆகியோருக்குப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பாராட்டு இனியும் தொடர அவர்கள் பாடுபடுவார்கள் என நம்புகிறேன்.

''சிறுசேமிப்பை மக்களிடம் ஊக்கப்படுத்தும் வகையில் பரிசுக் கூப்பன் திட்டம் அண்மையில் அறிவித்தோம். இந்தத் திட்டம் மகாராஷ்டிரா, கர்நாடகம் ஆகியவற்றில் உள்ளன. பரிசுக் கூப்பன் திட்டத்துக்குத் தமிழகத்தில் மக்களிடையே பெரும் வரவேற்பு உள்ளது. 2 இலட்சம் பரிசுக் கூப்பன்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு பரிசுக் கூப்பன் ஆயிரம் ரூபாய். கோவை மாவட்டத்தில் 18 ஆயிரம் பரிசுக் கூப்பன் வினியோகிக்க குறியீடு செய்யப்பட்டதில், அவை அனைத்தும் விற்பனையாகி விட்டன. மேலும் பரிசுக் கூப்பன்கள் வினியோகிக்கப்படும்.

''ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, இவற்றில் சிறு சேமிப்பு மூலம் வசூல் செய்கிற அந்த அமைப்பைச் சேர்ந்தவற்றுக்கு அரசு பரிசுத் தொகையாக ஊக்கத் தொகை வழங்கும். இதனை கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களான பாலம் கட்டுதல் சாலை போடுதல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தலாம்.

## இலவசக் கண்சிகிச்சை முகாம்

கோவையில், அண்மையில் நடந்த தமிழக அரசு இலவசக் கண்சிகிச்சை முகாமில், அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 85 பேருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கண்ணாடிகளை வழங்கினார்.

TNPSC **விளம்பர எண்: 1/90**

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

அகில இந்திய பணிகள் மற்றும் மாநிலப் பணிகளைச் சேர்ந்த அலுவலருக்கான அரையாண்டு மற்றும் மொழித் தேர்வுகள், மார்ச் - 1990.

அகில இந்திய பணிகள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., மற்றும் தமிழ்நாடு மாநிலப் பணிகளைச் சார்ந்துள்ள சில வகைப்பிரிவு அலுவலருக்கான (Certain classes of Officers) அரையாண்டு மற்றும் மொழித் தேர்வுகள் இவ்வாணையத்தினால் 22.3.1990 முதல் நடத்தப்படும். இத்தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 13.2.1990 ஆகும். விண்ணப்பப்படிவத்தையும் சம்பந்தப் பட்ட விவரங்களையும் தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002, அவர் களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்துக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்புகள்:**

1. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் தற்போது பணியில் இருப்போருக்கு மட்டுமே இத்தேர்வுகள் உரியதாகும்.

2. இத்தேர்வுகளுடன் நடத்தப்பெறும் தமிழ் மொழி உயர்நிலைத் தேர்வே மற்ற மாநிலங்களைச் சார்ந்த அகில இந்திய பணிகளில் பணிபுரியும் அலுவலருக் கான ரூபாய் 1,000/- ரொக்கப் பரிசளிப்புத் திட்டத்தின் கீழான 'தமிழ்ப் புலமைத் தேர்வும்' ஆகும். இத்தேர்வு எழுத விரும்பும் அலுவலர்கள் பத் தாண்டு பணிக்காலம் பூர்த்தி செய்யாதவர்களாயிருத்தல் வேண்டும். தேர்வு எழுத விரும்புவோர் தங்கள் மாநில அரசாங்கத்தின் தலைமைச் செயலர் வாயிலாக, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர், சென்னை-600 009 அவர்களுக்கு 13.2.1990-க்குள் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

DIPR/81/MS/90/CHHAGA

கோவை அருகே உள்ள ஆலாந்துறை அரசு மேல்நிலைப் பள்ளியில், இலவசக் கண்சிகிச்சை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 205 பேர் தேர்வு செய்யப்பட்டு 85 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

### 19 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி

கோவை மாவட்டத்தில் நடப்பாண்டில் 18,970 எக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கோவையில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது:

கோவை மாவட்டத்தில் கடந்த 1988-ஆம் ஆண்டில் 18 ஆயிரத்து 123 எக்டேரில் மட்டும்தான் நெல் சாகுபடி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் (1989-90) இதுவரை 18 ஆயிரத்து 970 எக்டேர் நிலத்தில் நெல்சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழை சாதகமாக இருந்ததால் மானாவாரி பகுதியில் ஒரு இலட்சத்து 16 ஆயிரம் எக்டேரில்தான் சிறு தானியப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. உடுமலைப் பகுதியில் மக்காச்சோளம் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. ஏக்கருக்கு 11.2 டன் வரை மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் நடப்பு ஆண்டில் 13,676 எக்டேரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு இருக்கிறது. மேலும் மார்ச் மாதத்திற்குள் சுமார் 5 ஆயிரம் எக்டேரில் கரும்புச் சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு 18 ஆயிரம் எக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதுவரை அறுவடை செய்யப்பட்டதில் இருந்து ஏக்கருக்குச் சராசரி 9 குவிண்டால் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பரம்பிக்குளம் முக்கியக் கால்வாயில் பொள்ளாச்சிக் கால்வாய், வேட்டைக்காரன்புதூர் கால்வாய், ஆளியாறுபீடர் கால்வாய்ப் பகுதியில் பாசனத்திற்குத் தண்ணீர் விடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மேலும் 10,000 எக்டேர் நெல் சாகுபடி செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆளியாறு பழைய ஆயக்கட்டிலும், உடுமலைத் தாலுகாவிலும் 2749 எக்டேரில் ஏற்கெனவே நெல் அறுவடையாகியுள்ளது. ஆளியாறு ஆயக்கட்டுப் பகுதியில் எக்டேருக்குச் சராசரியாக 9.7 டன் வீதமும், உடுமலைத் தாலுகாவில் எக்டேருக்குச் சராசரியாக 7.2 டன் வீதமும் மகசூல் கிடைத்துள்ளது.

# 1990-ஆம் ஆண்டில் அரசு விடுமுறை நாட்கள்

1990-ஆம் ஆண்டு அரசு விடுமுறை நாட்களாகக் கீழ்க்காணும் நாட்களைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாட்களுடன், கீழ்க்காணும் நாட்களும் பொது விடுமுறை நாட்களாகும்.

### 1990-ஆம் ஆண்டின் அரசு விடுமுறைநாட்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| சனவரி | 1 | திங்கள் | ... | ஆங்கிலப் புத்தாண்டு நாள் |
| ,, | 14 | ஞாயிறு | ... | பொங்கல் திருநாள் |
| ,, | 15 | திங்கள் | ... | திருவள்ளுவர் நாள் |
| ,, | 16 | செவ்வாய் | ... | உழவர் திருநாள் |
| ,, | 26 | வெள்ளி | ... | குடியரசு நாள் |
| மார்ச் | 27 | செவ்வாய் | ... | தெலுங்குப் புத்தாண்டு நாள் |
| ஏப்ரல் | 2 | திங்கள் | ... | வங்கிக் கணக்குகள் ஆண்டுமுடிப்பு |
| ,, | 13 | வெள்ளி | ... | நல்ல வெள்ளி |
| ,, | 14 | சனி | ... | தமிழ்ப் புத்தாண்டு நாள் |
| ,, | 27 | வெள்ளி | ... | ரம்சான் |
| மே | 1 | செவ்வாய் | ... | மே தினம் |
| ஜுலை | 4 | புதன் | ... | பக்ரீத் |
| ஆகஸ்டு | 2 | வியாழன் | ... | மொகரம் |
| ,, | 15 | புதன் | ... | விடுதலை நாள் |
| ,, | 24 | வெள்ளி | ... | விநாயகர் சதுர்த்தி |
| செப்டம்பர் | 27 | வியாழன் | ... | வங்கிக் கணக்குகள் அரையாண்டு முடிப்பு |
| ,, | 28 | வெள்ளி | ... | ஆயுத பூஜை |
| ,, | 29 | சனி | ... | ஆயுத பூஜை |
| அக்டோபர் | 2 | செவ்வாய் | ... | காந்தி ஜெயந்தி மீலாடி நபி |
| ,, | 17 | புதன் | ... | தீபாவளி |
| டிசம்பர் | 25 | செவ்வாய் | ... | கிருஸ்துமஸ் |

குறிப்பு:-

ஏப்ரல் 2 திங்கட்கிழமை, செப்டம்பர் 27 வியாழக் கிழமை ஆகிய விடுமுறை நாட்கள் அரசு அலுவலகங்களுக்குப் பொருந்தா.

கீழ்க்காணும் நாட்களும் அரசு விடுமுறை நாட்களாகும்.

எல்லா இரண்டாவது சனிக்கிழமை நாட்கள்

ஏப்ரல் 7 சனிக்கிழமை மகாவீரர் ஜெயந்தி

### மாநகராட்சி வணிக வளாகம்!

கோவை நகரத் தூய்மைக்கு விரைவில் தீவிர இயக்கம் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகுஉள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தெரிவித்துள்ளார். 6-1-90 அன்று கோவை மாநகராட்சியின் சார்பில் கட்டப்பட்ட புதிய வணிக வளாகத்தை அவர் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்-

"இந்த வளாகம் டாட்டாபாத்தில் ரூ. 11 இலட்சம் செலவில் கட்டப்பட்டதாகும். இந்த வளாகத்தில் ஒவ்வொரு கடையும் மாதத்திற்கு ரூ. 700 என்ற அளவில் வாடகைக்கு விடப்படுகிறது. இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகள் பயனடைவர்.

# தமிழ்நாடு மின்சார வாரியம்
# வடசென்னை அனல்மின் திட்டம்

## ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) மூன்று நகல்களோடு மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல்-1 மின்னாக்கம் மூன்றாவது தளம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் பெயர் | : | வட சென்னை அனல் மின்திட்டம் - முதல் கட்டப் பணி - பொதுகட்டடப் பணிகள் தொகுதி ஒன்று (General Building Works Part.I) |
| 2. | ஒப்பந்த வரையறை எண் | : | SECT.I/NMTPP/11 |
| 3. | மொத்த வேலையின் தோராய மதிப்பு | : | ரூ.200 இலட்சங்கள் |
| 4. | பிணை வைப்புத் தொகை | : | ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) |
| 5. | ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும் | : | 1990, பிப்ரவரி 14-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12.00 மணி |
| 6. | **தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும்** | | 1990, பிப்ரவரி 14 ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி |
| 7. | **ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை** | | |
| | தமிழ்நாட்டிற்குள் | : | ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| | தமிழ்நாட்டிற்கு வெளியே | : | ரூ.550/- (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்) |
| 8. | ஒப்பந்தத்தை அனுப்புதல் | : | இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு. ஒப்பந்தங்கள் ஒப்பந்த வரையறையில் உள்ள செக்ஷன் ஏ3ன் 16வது பிரிவில் கண்டுள்ள விதிகளின்படி அனுப்பப்பட வேண்டும். இவ்விதிமுறைகளுக்கு முரணாக சமர்ப்பிக்கப் படும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும். |

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள் தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை - 600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையைப் பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்தி பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு, மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல் மின்னாக்கம்-1 அலுவலகத்தில் 17.1.90 காலை 10-30 மணி முதல் 12.2.90 மாலை ஐந்து மணி வரை பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த வரையறை பெறுவதற்கு செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்திற்காகவும் திரும்பத் தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.50/- கூடுதலாக செலுத்த வேண்டும். பொதுவாக, ஒருவருக்கு ஒரே ஒரு ஒப்பந்த வரையறை மட்டும் தான் கொடுக்கப்படும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

பிணைவைப்புத் தொகையன்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்துசேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. விற்பனை செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும் போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

**தலைமைப் பொறியாளர்/பொதுவியல் வடிவமைப்பு**

DIPR/107/MS/90/MCS

''கோவை நகரைத் தூய்மைப் படுத்தவும், சுகாதார வசதிகளை மேம் படுத்தவும் விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்'' என்றார். நகரின் குப்பைகளை அகற்றுவதற்காக 5 டிரக்குகளை மாநகராட்சிக்கு அவர் வழங்கினார்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சிக்கு மாநில அரசு ரூ. 100 கோடி நிதியை ஒதுக்கி யுள்ளது. இத்தொகையில் ரூ. 15 கோடி அளிக்கப்பட்டு விட்டது. மேலும் ரூ. 5 கோடிக்கான திட்டங்கள் தீட்டப் பட்டு வருகிறது.

''தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் குப்பைகளை அகற்றும் பணியை விரைவாக்கி, சென்னை நகரைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்க ஆவன செய்யப்படும்.



*நல்ல எண்ணங்களைத் தூவினால் தான், அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.*

*போற்ற வேண்டியவை உண்மை-உழைப்பு-உயர்வு; பின்பற்றவேண்டியவை கனிவு-பணிவு-துணிவு; பேணப்பட வேண்டியவை கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு.*

### 37 தொகுப்பு வீடுகள்

கோவை மாவட்டம் மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மைலேரிபாளையம் ஊராட்சிக்குட்பட்ட மாம்பள்ளி கிராமத்தில் 4 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 37 தொகுப்பு வீடுகளின் திறப்பு விழா 7-1-90 அன்று நடந்தது.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் விழாவில் பங்கேற்று, தொகுப்பு வீடுகளைத் திறந்து வைத்தார். ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 42 ஆயிரம் வீடுகள் கட்டப்பட உள்ளதாகவும், இதில் 90 சதவீத வீடுகள் கட்டப்பட்டு ஏழை எளியவர்களுக்கு பொங்கல் பரிசாக அளிக்கப்படும்'' என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் ஆறுமுகம், செயலர் டாக்டர் நாராயண், விடுதலை விரும்பி எம்.பி., நடராஜன் எம்.எல்.ஏ., மதுக்கரை ஊராட்சி ஒன்றியத் தலைவர் திருமலைசாமி உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டு பேசினார்கள்.

### வேலைவாய்ப்புப் பெயரைப் பதிவு செய்ய புதிய முறை!

கோவை மாவட்டம் வால்பாறை-உடுமலைப்பேட்டை வட்டங்களில் உள்ளவர்கள் வேலைவாய்ப்பு கோரி பெயரைப் பதிவு செய்ய, கோவையில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துக்கு வரவேண்டியது உள்ளது. இதற்குப் பதிலாக கோவை மாவட்டத்தில் புதிய முறை அமல் படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்த இரு வட்டங்களுக்கும் வேலைவாய்ப்புப் பதிவு அதிகாரிகள் வேனில் சென்று பெயர்களைப் பதிவு செய்வார்கள். வால்பாறையில் ஒவ்வொரு மாதத்திலும் முதல் திங்கட்கிழமை அன்று வால்பாறை டவுன்ஷிப் அலுவலகத்திலும், உடுமலைப்பேட்டையில் ஒவ்வொரு மாதமும் முதல் செவ்வாய்க்கிழமை அன்று நகராட்சி அலுவலகத்திலும் பெயர்களை அதிகாரிகள் பதிவு செய்வார்கள்.

இப்புதிய முறை அமல்படுத்திய முதல் நாளன்று, வால்பாறையில் 150 வேலையில்லாதோரும், உடுமலையில் 75 பேரும் பெயரைப் பதிவு செய்துள்ளனர்.

### ஊரக வளர்ச்சிப் பணிகள்

கோவையில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும் போது குறிப்பிட்டதாவது:

தமிழ்நாட்டில் 6481 ஊராட்சி மன்றங்கள், 124 பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கு அடுத்த 3 ஆண்டுகளில் சொந்தமாக கட்டடம் கட்டி முடிக்கப்படும்.

''தமிழ்நாட்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்துக்கு ரூ. 297 கோடி நிதி ஒதுக்கப்பட்டு அதில் இதுவரை ரூ. 148 கோடி செலவிடப்பட்டுள்ளது. எடுத்துக் கொள்ளப்பட்ட 97 ஆயிரம் வேலைகளில் 75 ஆயிரம் வேலைகள் முடிக்கப்பட்டு உள்ளன. தவிர 42 ஆயிரம் வீடுகள் கட்ட குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. இதில் 30 ஆயிரம் வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. மீதமுள்ள வீடுகள் மாார்ச்சு மாதத்துக்கு முன்பாக கட்டி முடிக்கப்படும்.

''கோவை, மதுரை, சென்னை மாநகராட்சிகளில் தற்போது இருக்கும் மக்கள் தொகை அடிப்படையில் ''வார்டுகள்'' பிரிக்கும் பணி நடந்து வருகிறது. இந்த வேலை முடிவடைந்ததும் மாநகராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும்.

''கோவை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பள்ளி, ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுவது உள்பட 3,524 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் இதுவரை 3,390 பணிகள் செய்து முடிக்கப்பட்டு உள்ளன. 1,765 தொகுப்பு வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டு இவை முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

### 15 வகை புதிய பயிர் இரகங்கள்!

கோவையில் 9-1-90 அன்று நடந்த உழவர் தின விழாவில், வேளாண்மைப் பல்கலைக் கழகம், இந்த ஆண்டு கண்டுபிடித்துள்ள 15 வகை புதிய பயிர் வகைகளை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் வெளியிட்டார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், விவசாயத் துறை ஆகியவை இணைந்து கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உழவர் தின விழா மற்றும் விவசாயக் கருத்தரங்கை நடத்தின. விழாவுக்குப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சோ. ஜெயராஜ் தலைமை தாங்கினார்

வேளாண்மைப் பல்கலைக் கழகம் சார்பில் கோயமுத்தூர் 45 நெல், கோவில்பட்டி 9 சோளம், டி.சி.எச்.பி 241 பருத்தி, விருத்தாசலம் 3 நிலக் கடலை, பயூர் 1 எள், கோவில்பட்டி 5 நெட்டை சோளரகம் உள்பட 15 வகை புதிய ரகப் பயிர் வகைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவைகளை பொங்கல் தினப் பரிசாக விவசாயிகளுக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

**தகவல்: அ. சந்திரசேகரன்**
**உதவி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**




டிஐபிஆர்/௨௯௧௪/எம்எஸ்/௮௭.

தமிழ் வளர்த்த பெரியார்:

# செந்நாப் புலவர் கார்மேகனார்

**சோ. பால்ராஜ் எம்.எல்.ஏ.**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர் தலைமணிகளில் ஒருவராய் விளங்கிய செந்நாப்புலவர் பேராசிரியர் திரு. ஆ. கார்மேகனார் அவர்கள் தன் வாழ்நாளெல்லாம் நாட்டுக்கும் மொழிக்கும் நற்றமிழர் இனத்துக்கும் அயராது உழைத்த அறிஞராவார். கார்மேகம் எனும் தம் பெயருக்கு ஏற்ப, சொன் மாரி பொழியும் திறன் மிக்கவர். தமிழுக்கோ, தமிழர் நலத்திற்கோ கேடு சூழும்பொழுது எவருக்கும் அஞ்சாமல் பேசும் உள்ள உரம் கொண்டு திகழ்ந்தார். நிறைந்த புலமையும், சிறந்த சொல்லாற்றலும், விரிந்த சிந்தையும், பரந்த நோக்கமும் கொண்ட திரு. கார்மேகனார் அவர்கள் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் 37 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி மாணவர்பால் தமிழ் ஆர்வத்தை ஊட்டினார். சங்கநூல்களில் அழுத்தமான பயிற்சியும் நுண்மாண் நுழைபுலமும் கொண்ட அவர் இலக்கிய நூல்கள் பல இயற்றியும், ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியும், உணர்ச்சி ஊட்டும் பல பாக்கள் புனைந்தும் தமிழ் வளர்த்த பெருமைக்கு உரியவர் ஆவார்.

பேராசிரியர் ஆ. கார்மேகனார் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் அபிராமம் என்னும் ஊருக்கு அணித்தான அகத்தார் இருப்பில் ஆயர் மரபில் 1889ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27ஆம் நாள் பிறந்தார். இவர்தம் தந்தையார் ஆயர்பாடிக் கோனார்; தாயார் இருளாயி அம்மாள். தந்தையார் கல்வியில் பிற்போக்குற்றுக் கிடக்கும் மக்களின்-குறிப்பாக ஆயர் குல மக்களின் இழிநிலையை நீக்குவதற்கு அல்லும் பகலும் உழைத்தார்.

கார்மேகனார் தொடக்கக் கல்வியை முடித்தவுடன் அந்நாளில் மேற்படிப்புக்கு அவ்விடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் இல்லாமையால் ஓராண்டுக் கல்வி இடையில் தடைப்பட்டது. இராமநாதபுரம் சேதுபதிகளின் வழித் தோன்றலான திரு பாண்டித்துரைத் தேவர் அவர்கள் 1901ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 14ஆம் நாள் மதுரையில் நான்காம் தமிழ்ச் 'சங்கத்தை நிறுவினார்கள். கார்மேகனாரின் தந்தையார் மதுரைக்கு வரும் போதெல்லாம் அத்தமிழ்ச் சங்கத்திற்குச் சென்று அங்கு புலவர்கள் தமிழ் நூலாராய்ச்சி செய்வதையும், மாணவர்கள் கல்வி பயிலுவதையும் மிகுந்த விருப்பத்துடன் பார்ப்பதுண்டு. அதன் விளைவாக அச்சங்கத்தில் தம் மகனையும் சேர்த்து, தமிழ் இலக்கண இலக்கியக் கல்வி பயில்விக்க வேண்டும் என்று பேரார்வம் கொண்டார்.



தமிழ்ச்சங்கக் கல்லூரியில் மாணவர்கள் சேர்வதென்பது எளிதானதன்று. தமிழ்ச்சங்கத்தலைவர் திரு. பாண்டித்துரைத்தேவர் அவர்களின் கட்டளைப்படி, கல்லூரித் தலைவர், கார்மேகனாரின் தமிழறிவைச் சோதித்து அறிந்து, கல்லூரியில் சேர்த்துக் கொண்டார். முதலில் புகுமுக வகுப்பில் சேர்ந்து படித்தார். இவர் கல்வியில் பேரார்வமும் ஊக்கமும் உடையவராய் கல்வியிலேயே சிறந்த நாட்டமுடையவராய் விளங்கினார். அதனால் மாணவர்களிடையே இவர்பால் நன் மதிப்பும் ஆசிரியர்களிடையே சிறந்த அன்பும் உண்டாயின.

> அறிவு, பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கிறது இயற்கையிலேயே! இருக்கும் அறிவு தெளிவு பெற, பகுத்தறிவு பெருக, கல்வி கேள்வி மிகவும் முக்கியம்!
>
> —முதல்வர் கலைஞர்

இவர் சிறந்த நினைவாற்றல் உடையவராக இருந்தமையால் நன்னூல் முதலிய இலக்கண நூற்பாக்களையேயன்றி உரைகளையும், இலக்கியங்களில் நூற்றுக்கணக்கான பாடல்களையும் நெட்டுருவாகச் சொல்லக் கூடியவராக இருந்தார். இலக்கியங்களை ஒப்பு நோக்கி ஆராய்ந்து படிப்பதில் சீரிய விருப்பம் உடையவராக விளங்கினார். சங்க இலக்கியங்களின் வரலாறுகளையும் அவற்றில் வரும் சேர, சோழ, பாண்டியர்களின் சரிதங்களையும் சாசனங்களில் வரும் தமிழ் வேந்தர்களைப்பற்றியும், காலவரையறைப்படி ஆராய்ந்து அறியும் ஆர்வமுடையவராகவும் இருந்தார்.

இவர் தமிழ்ச்சங்கத்தில் பயிலும் போது கப்பலோட்டியதமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள் கார்மேகனாரின் அறிவாற்றலைக் கண்டு "நீ நன்றாகப்படி; பிற்காலத்தில் சிறந்த சொற்செல்வனாக விளங்குவாய்" என வாழ்த்துரை பகர்ந்தார். இவ்வாழ்த்துரையின்படி இவர் சொற்செல்வராய் விளங்கினார். 22 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு பேரவையில் சிதம்பரனார் அவர்களே இவரது சொற்பொழிவைக் கேட்டுப் பாராட்டலானார்.

தேர்தலில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றமையால் புதுக்கோட்டை மன்னரின் பொற் பதக்கப் பரிசுக்கு உரியவரானார் கார்மேகனார். இப்பரிசு தமிழ்ச்சங்கத்தலைவர் பாண்டித்துரைத் தேவர் அவர்களின் தலைமையில் சங்கப் பேரவையில் இவருக்கு அளிக்கப்பட்டது.

1912ஆம் ஆண்டு மே திங்களில் கார்மேகனாருக்கும் க. பத்மாசினியம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடந்த சில திங்களின் பின்னரும் இவர் தமிழ்ச் சங்கத்துக்கு வந்து பண்டித வகுப்பில் கல்வி பயின்றுகொண்டிருந்தார். கோடை விடுமுறையில் ஊருக்குச் சென்றிருந்த போது 'மெயில்' நாளிதழில் அமெரிக்கன் 'கல்லூரியில் பணியாற்றத் தமிழ்ப் பேராசிரியர் தேவை' என்ற விளம்பரத்தைக் கண்ணுற்று, உடனடியாக கல்லூரி முதல்வருக்கு விண்ணப்பம் செய்தார். கல்லூரித் தலைவர், தமிழ்ப் பேராசிரியர் பணிக்கு வந்திருந்த விண்ணப்பங்கள் அனைத்தையும்

தமிழ்ப்பேரறிஞர் மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாத அய்யர் அவர்களிடம் கொடுத்துத் தக்கவரைத் தெரிவு செய்ய வேண்டிக்கொண்டபொழுது, அவர், 'மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் படித்தவர்களே இப்பதவிக்குத் தக்கவர்கள்' என்றும் 'கார்மேகனார் நிறைந்த தகுதி உடையவர்' என்றும் குறிப்பிட்டுச் சொன்னார். உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றிய பயிற்சி இல்லாத-22 வயது நிரம்பாத இளைஞரை நிர்ணயம் செய்வதில் கல்லூரித் தலைவர் தயக்கம் காட்டியபோதும், சங்கத்தில் தமிழ் பயின்ற ஒருவர் ஆசிரியர் பயிற்சி இல்லையாயினும் திறம்படப் பணியாற்றுவார் என்ற நம்பிக்கையில் 1914-ஆம் ஆண்டு தமிழ்ப்பேராசிரியர் பணியைக் கார்மேகனாருக்கு அளித்துச் சிறப்பித்தார். இக்கல்லூரியில் தமிழாசிரியர் இவர் ஒருவரே. இண்டர்மீடியட், பி.ஏ. என்னும் இரண்டு வகுப்புக்களே இருந்தன. மாணவர்கள் ஒத்த வயதினராக இருந்தனர். இவர். ஆண்டில் இளையவராக இருப்பினும் உயர்ந்த தோற்றமும் அதற்கேற்ற உடற்கட்டும் உடையவராக இருந்தார். நீண்ட கருமைநிறச் சட்டையும் வெள்ளைத் தலைப்பாகையும் மடித்த சரிகை மேல்வேட்டியும் அணிந்த தோற்றத்தோடு இவர் வகுப்பிற்குள் நுழையும்போது மாணவர்க்கு மன எழுச்சியும் மகிழ்ச்சியும் விளையும். இவர் பாடம் சொல்லும் முறை, இவரது சொல்நடை மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்து இழுக்கும். மாணவர்கள் ஆர்வமுடன் கல்வி பயில்வதைக் கண்ட கல்லூரி முதல்வர் கார்மேகனாரைப் பாராட்டி மகிழ்ந்தார்.

இவர் சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திருவிதாங்கூர் பல்கலைக் கழகம், மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆகிய வற்றின் குழுக்களில் உறுப்பினராக இருந்து அரும்பணி ஆற்றி இருக்கிறார். இவர் எண்ணற்ற நூல்களை எழுதி தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள தொண்டு பெருமிதத்திற்கு உரியதாகும்.

செந்நாப்புலவர் கார்மேகனார் தம் வாழ்க்கையை இயன்ற அளவு புனிதமாகவே நடத்த வேண்டும் என்ற கொள்கை படைத்தவர். மானம் அழியாமல் போற்றி ஒழுக வேண்டும் என்ற எண்ணம் பெரிதும் உடையவர்; பிறர்க்கு இன்னா செய்தலைக் கனவிலும் கருதாதவர்; இன்னா செய்தவருக்கும் இனியவே செய்யும் மனப்பான்மை படைத்தவர்; பிறர் பொருளைப் பெற்று வாழ்தலுக்கு ஒரு சிறிதும் ஒருப்படாத உள்ளம் உடையவர்; நேர்மையினின்று பிறழுகின்றவர்களைச் சீறிக் கடியும் மனத்திண்மை பூண்டவர்; தமிழ் மொழியை எள்ளிப் பழிக்கும் எவரையும் கடிந்து ஒதுக்கும் உரமுடையவர்; பிறர் துன்பம் துடைக்க முற்படும் இரக்கமும் குழைவும் உடைய அகமுடையவர்.

சீரிய பண்பு நலன்கள் பெற்று, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த தமிழறிஞர் பேராசிரியர் அ. கார்மேகனார் அவர்களுக்கு மதுரைத் திருவள்ளுவர் கழகச் சார்பில் 1955ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் நாளில் (தமிழ்த் திருநாளன்று) தமிழவேள் திரு. பி.டி. இராசன் அவர்கள், நாவலர் கணக்காயர், திரு. ச. சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னாடை போர்த்திச் ''செந்நாப் புலவர்'' என்ற சிறப்புப் பட்டமும் வழங்கிப் பாராட்டி மகிழ்ந்தார்.

அறிவும், ஆற்றலும், புலமையும், புகழும் ஒருங்கே அமைந்த பேராசிரியர் கார்மேகனார் இறவாத புகழ் படைத்த பெருநூல் பல இயற்றி, ஆராய்ச்சி மிக்க அரிய சொற்பொழிவுகள் ஆற்றித் தமிழுக்கும் தமிழருக்கும், தமிழ் நாட்டுக்கும் ஆற்றிய தொண்டுகள் அளவற்றவை-என்றும் நின்று நிலைப்பவை.




## 'தேவகோட்டை சாலை'

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் காரைக்குடிக்குத் தெற்கே தேவகோட்டை செல்லும் வழியில் உள்ள இரயில்வே நிலையம் 'தேவகோட்டை ரஸ்தா' என்ற பெயரில் 1937- முதல், கடந்த 52 ஆண்டுகளாக இருந்து வந்தது.

இரயில்வே நிலையத்தின் பெயர் தமிழில் இல்லாமல், இந்தியில் 'ரஸ்தா' என்று இருந்து வந்தமையால், இப்பெயரைத் தமிழில் மாற்ற வேண்டும் எனத் தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. இளங்கோவன், இ.ஆ.ப., அவர்கள், மதுரையில் உள்ள தென்னக இரயில்வேயின் மண்டலப் பொறியாளருக்குக் கடிதம் எழுதினார். மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்தைப் பரிசீலித்த தென்னக இரயில்வே நிர்வாகம் இக்கோரிக்கையை ஏற்று உடனடியாக இப்பெயரை தமிழில் மாற்றி எழுத உத்தரவிட்டது. இதன்படி தேவகோட்டை ரஸ்தா என்ற பெயருக்குப் பதிலாக 'தேவகோட்டை சாலை' என மாற்றி தமிழில் எழுதப்பட்டது.

—துரை. தாமரைச் செல்வம்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்
சிவகங்கை.



# புதிய குடியிருப்புகள் திறப்பு விழா



### நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால், சென்னை - வியாசர்பாடி பகுதியில் உருவாக்கப்பட்டுள்ள 'உதயசூரியன் நகர்ப்புதிய குடியிருப்பு' களை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 16.1.90 அன்று திறந்து வைத்தார்.

வியாசர்பாடி - மல்லிகைப்பூ குடியிருப்புப் பகுதியில் மிகவும் சீர்கேடாக வாழ்ந்துவந்த குடும்பங்களுக்காக ரூ.83.34 இலட்சம் செலவில் உருவானதே 'உதயசூரியன் நகர்' திட்டப்பகுதி. அட்கோ உதவியுடன் 324 மூன்று அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் இங்கே செயல்படுத்தப்பட்டுள்ளது.

அதன் திறப்புவிழா மாண்புமிகு மின்துறை மற்றும் குடிசைப்பகுதி மாற்றுவாரிய அமைச்சர் ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்களும் இந்த விழாவில் பங்கேற்று உரையாற்றினார்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு. வீ. மணிவண்ணன், இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். விழா முடிவில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைமைப் பொறியாளர் திரு. தி.ப. காளியப்பன் நன்றி கூறினார்.

இந்த விழாவில் - வாரிய ஆலோசனைக்குழுத் தலைவர் திரு. கோ. சிட்டிபாபு, தொகுதிச் சட்ட மன்ற உறுப்பினர் திரு. செங்கை சிவம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு. சி. செல்லப்பன், இ.ஆ.ப., மக்களவை உறுப்பினர் திரு. தா. பாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தி படிக்கப் பட்டது.

அதன்பின்னர் - 'உதயசூரியன் நகர்' குடியிருப்புகளைத் திறந்துவைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பேசியதாவது:

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதே இந்த அரசின் கொள்கை. வறுமையை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் குடிசை மாற்று வாரியம் ஒரு களமாகும். சென்னை மாநகரம் தமிழ்நாட்டின் தலைநகரம். இங்கே, முகத்தில் குறுமருக்கள் போலக் குடிசைப் பகுதிகள் ஆயிரத்துக்கு மேல் இருக்கின்றன. குடிசைப் பகுதிகளில் வசதிகளை வழங்குவதை விட அந்தப் பகுதிகளையே தலைகீழாக மாற்றி குடிசை வாழ் மக்களை அங்கே குடியேற்ற வேண்டும் என்பதே இந்த அரசின் திட்டம். அதற்கேற்ப 1970 ஆம் ஆண்டு குடிசை மாற்றுவாரியம் தொடங்கப்பெற்றது. அதற்கெனத் தலைவர், உறுப்பினர்கள், விதிமுறைகள் அமைத்து வாரியத் தலைவர் சகோதரர் அரங்கண்ணல் அவர்களின் ஆர்வ மிகுதியின் அடையாளமாகக் குடிசைகள் கோபுரமாகிற காட்சியைக் காணுகிறோம். பூச்சி புழுக்களைப் போல் சாக்கடை ஓரங்களில் வாடி வதங்கும் மனித தெய்வங்களுக்கு இந்தக் குடிசை மாற்று வாரியக் கோயிலை அமைத்ததை, பெரியதோர் புண்ணியச் செயலாக நான் கருதுகிறேன். திருத்தலங்களுக்கு யாத்திரை செய்து பெறும் பயனை விட, இந்தத் திவ்விய ஸ்தலங்களை அமைப்பதிலே பெரும் பயன்கிட்டுவதாகவே நான் நம்புகிறேன்.''

''-இவ்வாறு 71-ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியத்தினுடைய வெற்றியை நானே மகிழ்ந்து பூரித்துப் பாராட்டி, இந்தப் பணியை இந்த அரசு எப்படிக் கருதுகிறது என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அந்த வரிசையிலே இன்றைய தினம் உதய சூரியன் நகர்-ஏறத்தாழ 300க்கு மேற்பட்ட வீடுகள் - 80 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவிலே கட்டி முடிக்கப்பட்டு அதனுடைய திறப்பு விழா இன்று நடைபெற்றிருக்கின்றது.

குடிசை மாற்று வாரியம் என்ற இந்தப் பெயர் ஏன் சூட்டப்பட்டது என்றால், ஏற்கெனவே கூட குடிசை வாழ் மக்களுக்குச் சில நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதற்காக முன்பிருந்த அரசுகள் முயற்சிகளை மேற்கொண்டது உண்டு. மத்திய அரசாக இருந்தாலும் சரி. மாநிலத்திலே இருந்த காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி - அந்த அரசுகள் எல்லாம் முயற்சிகளை மேற்கொண்டது உண்டு. நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால் அவைகள் எல்லாம் குடிசைவாழ் மக்களுடைய மேம்பாட்டுத் திட்டங்களாகத்தான் (Slum Improvement Scheme) இருந்தன. எனவே, அந்த மேம்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகை - சாலை வசதிக்காக - விளக்கு வசதிக்காக - சுகாதார வசதிக்காக - கழிவு நீரை அகற்றுவதற்காக - குடிநீரை வழங்குவதற்காக அரசினால் ஒதுக்கப்பட்ட தொகை உரிய இடங்களுக்கு உரியவர்களுக்குப் போய்ச் சேராமலே மறைந்து விட்டது.

''எனவேதான் மேம்பாட்டுத் திட்டமும் இருக்கட்டும், அதற்கிடையே குடிசைகளை அறவே அகற்றுகின்ற திட்டமும் இருக்கட்டும் என்ற வகையில் - இந்தத் திட்டத்தை 1970-ஆம் ஆண்டிலே அறிமுகப்படுத்தி 1971-ஆம் ஆண்டு முதல் சென்னையிலும் கோவை - சேலம் - திருச்சி போன்ற வேறு பல நகரங்களிலும் குடிசை மாற்று வாரியப் பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

''இந்தப் பணிகளுக்கு மத்திய அரசிடமிருந்தும் நமக்குத் தாராளமாக உதவி கிடைக்கும் என்பதை அமைச்சர் வீராசாமி இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். மத்திய அரசு சென்னை நகரத்திற்குக் கடந்த காலத்தில் வழங்க வேண்டிய உரிய நிதியை வழங்கவில்லை, என்று ஏற்கெனவே குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். திட்டக் குழுவிடமும், நிதிக்குழுவிடமும் தமிழகத்தின் முதலமைச்சர் என்ற முறையிலே நான் : கடந்த சில மாதங்களுக்கு முன்பு - முந்தைய ஆட்சியில் பேசிய போது எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

''இந்தியாவிலே இருக்கின்ற வேறு பல பெரிய மாநகரங்களுக்கு ஐம்பது கோடி ரூபாய் என்ற அளவிற்குக் குடிசைப் பகுதிகளுக்காக அவற்றின் மேம்பாடுகளுக்காக நீங்கள் செலவழித்திருக்கிறீர்கள். ஆனால் சென்னை மாநகரத்திற்கு என்று எதுவும் தரவில்லை என்று எடுத்துச சொல்லி, அந்தத் திட்டக்குழு, நிதிக் குழு உறுப்பினர்களை எலலாம சென்னையிலே உள்ள குடிசை வாழ மக்கள் இருக்கின்ற பகுதிகளுக்கு அழைத்துச் செல்கின்ற அந்தப் பணியினையும் அதிகாரிகளையும், அமைச்சர்களையும் கொண்டு செய்வித்து நேரிலே பார்த்த பிறகு - ஆமாம், நாங்கள் தவறுதான் செய்து விட்டோம் - என்று அந்தக் குழுவின் தலைவர்களே ஒப்புக் கொண்டு சென்றார்கள்.

''ஆனால் இன்றைகக விடுபட்டுப் போன பட்டியலிலே இல்லாமல் அடிபட்டுப் போன சென்னை மாநகரின் வளர்ச்சிக்காக - அதிலும் குறிப்பாக ஏழையெளிய மக்கள் வாழ்கின்ற இதுபோன்ற பகுதிகளின் வளர்ச்சிக்காக - தேவையான பணத்தை மத்திய அரசு தருவதற்குத் தயங்காது என்று கருதுகிறேன். தயங்கக்கூடாது என்று நான் எண்ணுகிறேன். உங்கள் சார்பாகத் தொடர்ந்து அந்த நிதி உதவியைப் பெறவும். மாநில அரசின் நிதியை அதோடு சேர்த்து உங்கள் நலவாழ்விற்கான திட்டங்களை வகுக்கவும் இந்த அரசு முன்வரும் என்ற உறுதியை இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இன்னொன்று - இந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகளில் கடந்த காலத்தில் 71 முதல் 76 வரையில் குடி அமர்த்தப்பட்டவர்கள் அதற்குப் பிறகு பத்தாண்டுக்காலத்தில் வேறு யாரையோ அந்த வீடுகளிலே உப வாடகைக்கு வைத்துவிட்டு, இவர்கள் மீண்டும் குடிசை போட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்ற தகவலை நான் அறியாதவன் அல்ல. அப்படி ஒரு கணக்கெடுத்த போது, சென்னை மாநகரத்திலே மாத்திரம் 13 சதவிகிதம் பேர் - அது போல யாருக்கு இந்தக் குடிசை



# அறிவளித்த ஆசான்!

**- கவிஞர் பல்லவன்**

வரலாறு சிறந்த காஞ்சியிலே
கண்மலர்ந்த அறிஞன்நீ!
நல்லோர் புகழும் நற்றொண்டை
நாட்டில் பிறந்த சான்றோன்நீ!

ஆயிரங் காலத்து இருளோட்டி
அறிவளித்த ஆசான்நீ!
தாய்மொழி காத்த இனியன்நீ
தந்தை பெரியார் தனயன்நீ!

பண்பை விதைத்த பெருந்தகைநீ!
பகைநட் பாக்கிய வித்தகன்நீ!
அன்புளம் கொண்ட அண்ணன்நீ!
அறவழி நடந்த மன்னன்நீ!

காய்மொழி பேசாக் கண்ணியன்நீ!
கருத்தமு தூட்டிய அன்னையும்நீ!
வாய்மை அரசியல் வளர்த்தவன்நீ!
வரலாற்று வானச் சூரியன்நீ!

இதயத் துடிப்பில் ஒலிப்பாய்நீ
இரத்த நாளத்தில் இழைவாய நீ!
உதயச் சுடரில் சிரிப்பாய்நீ!
உலவும் காற்றில் மணப்பாய்நீ!

எக்காலத்தும் வாழ்வாய்நீ!
எங்கள் நெஞ்சை ஆள்வாய்நீ!
முக்கா லதது வினைத்தொகைநீ!
மூவாத் தமிழ்போல் வாழியநீ!



# தன்னலம் கருதாத தாயுள்ளம்

## கவிஞர் முருகுவண்ணன்

அண்ணா ஓர் உலகப் பெருங் காவியம்!
அறிவுலகம் பரவும் குற ளோவியம்!
-அறிஞர் (அண்ணா)

அண்ணா ஓர் உதயக் கதிர் வானகம்
அறிவியக்கப் புரட்சி செய்த நாடகம்!
-அறிஞர் (அண்ணா)

தமிழ்ப் பொழில் தழைக்கவந்த இளவேனில்-செந்
தமிழ்ப்பகைப் புலம்வென்ற புறப்பாடல்
தமிழினம் எழுச்சிபெற்ற புதுக்கோலம்-உயர்
தமிழின வரலாற்றில் புகழ்க்காலம்!
-(அறிஞர் அண்ணா)

இலக்கியம் படைக்கின்ற சொல்வண்ணம்!-ஏழை
எளியவரை உயர்வாக்கும் நல்லெண்ணம்!-தன்
நலத்தினைக் கருதாத தாயுள்ளம்!-மக்கள்
நலத்திற்குத் தனைத்தந்த பேருள்ளம்!
-அறிஞர் (அண்ணா)

கலைநகர் காஞ்சி தந்த புகழ்ச்சுரங்கம்-தமிழ்க்
கன்னி அர சாளவைத்த புதிய சுரங்கம்!
உலகினர் உள்ளம் வாழும் கவியரங்கம்!-நம்
உயிரிசைக் கடலருகே உறங்காமல் உறங்கும்
-அறிஞர் (அண்ணா)

மாற்று வாரிய வீடுகள் கொடுக்கப் பட்டதோ அவர்கள் அதிலே குடித் தனம் நடத்தாமல், வாழாமல், வேறு யாரையோ கொண்டு வந்து அங்கே குடி வைத்து, அவர்களிடம் வாடகை பெறுகின்ற நிலை இன்றைக்கு இருக் கின்றது.

''இது உண்மையிலே ஒரு சமுதாயக் குற்றம் என்பதை அவர்கள் உணர வேண்டும். உணர்ந்து திருந்த வேண் டும். இனி அப்படிப்பட்ட செயல் களிலே அவர்கள் ஈடுபடக்கூடாது என்று என்னுடைய சொந்தக் சகோத ரர்களாக இருக்கின்ற குடிசை வாழ் மக்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

''அதே போல் ஆதி திராவிட மக்களுக்காக இலவச வீடுகளைக் கட்டித் தரும் திட்டம் கொண்டு வந்தது, இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ்நாட்டிலே நம்முடைய அரசுதான் - 1971-ஆம் ஆண்டில், சென்னை மாநகரிலே எம்.எம்.டி.ஏ. திட்டத்தைக் கடந்த காலத்திலே நாம் அரசுப் பொறுப்பிலே இருந்தபோது கொண்டு வந்த செய்தியை அமைச்சர் தங்கவேலு இங்கே எடுத்துச் சொன் னார். அந்த எம்.எம்.டி.ஏ.வின் முயற்சியின் காரணமாகத்தான் இன் றைக்கு மறைமலைநகர் உதயமாகியிருக் கின்றது. சென்னையில் விரிவான வளர்ச்சியை இன்றைக்குக் காண முடி கின்றது. ஆனால் முழுமையான மன நிறைவு பெறத்தக்க அளவிற்கு அந்த வளர்ச்சி ஏற்பட்டுவிட்டதா என்றால் இல்லை!

''நண்பர் தா. பாண்டியன் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல், இன்னமும் தாய்மை முழுமையாகப் பேணப்படாத காரணத்தால் கொசுத் தொல்லையும் தொத்து நோய்கள் எந்த நேரத்திலும் பற்றிக் கொள்ளக்கூடும் என்கிற அச்சமும் நகர மாந்தருக்கு இல்லாமல் இல்லை. இவைகளை எல்லாம் நாம் ஒரேயடியாக ஒரே நேரத்தில் செய்து முடித்து விட முடியாது. சில நேரங்களில், நடந்து விட்ட தவறுகளைத் திருத்துவதற்கு நீண்ட காலம் ஆகும்.

''அவர்கள் குறிப்பிட்டதைப் போல் கழிவு நீர் செல்வதற்கான குழாய்களை அமைக்கின்ற நேரத்தில் அதை உடைப்பதும் அந்த இரும்பை எடுத்துச் சென்று அதை விற்றுப் பிழைப்பதும், அந்த வியாபாரத்தின் மூலம் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொள்ளலாம் என்று நினைப் பதும் ஒரு மனிதனுடைய விவகாரம் அல்ல; ஒரு சமுதாயத்தின் விவகாரம் என்பதை நினைத்துப் பார்த்தால் - அந்தச் சமுதாய விரோதச் செயல் களிலே யாரும் ஈடுபடமாட்டார்கள். எனவே, அரசு மாத்திரம் எல்லாக் காரியங்களையும் செய்து முடித்துவிட முடியாது. நான் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாக நினைக்கக் கூடாது. எல் லோருக்கும் இருக்கும் பொறுப்பினை உணர்த்துகின்றேன். அந்தப் பொறுப் புணர்வோடு அனைவரும் இதிலே ஈடுபட வேண்டும்.

''தம்பி டி.ஆர். பாலு எடுத்துக் காட்டியதைப் போல, எனக்குக் கூட ஆசைதான். இந்தவீடுகளை எல்லாம் வாடகைக்கு உங்களுக்கு விடுவதை விட, உங்களுக்கே சொந்தமாக ஆக்கி விட்டால், அதைப் பழுது பார்ப்ப தற்குப் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை ஒரு அரசு முன் வருவதைவிட, அதைப் பழுதுபார்க்க - சீர்படுத்த அந்த அக்கறை உங்களுக்குத் தானாக ஏற்படும் என்று எனக்குத் தெரியும். எனவே அதற்கான திட்டங்களையும் அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, தங்கவேலு மற்றும் அதிகாரிகள் மூலமாகப் பரிசீலித்துக் கொண்டிருக் கிறேன்.

''ஒவ்வொரு வீட்டின் விலையை யும் நிர்ணயித்து, தவணை முறையிலே அந்தப் பணத்தைக் கட்டி அந்த வீடு களை அவர்களுக்குச் சொந்தமாக்கி விடலாமா என்பதைப் பற்றியும் அரசு யோசித்துக் கொண்டிருக்கின்றது என்பதையும் எடுத்துக் கூறி - உதயசூரியன் நகர் குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியேறப் போகின்ற உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள் கிறேன்.''

—இவ்வாறு மாண்புமிகு முதலவர் கலைஞர் அவர்கள் உரையாற்றி னார்கள்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல். இராசேந்திரன்




# படமும் செய்தியும்

சென்னையில் மேயர் டி. சுந்தர்ராவ் நாயுடு அவர்களின் சிலையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு அமைச்சர் திரு ஆற்காடு வீராசாமி, திரு. கி. வீரமணி மற்றும் விழாக் குழுவினர் உடன் உள்ளனர். (18-1-90)

சென்னை மயிலாப்பூரில் கிளை நூலகக்கட்டடத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார். (21-1-1990)








மாண்புமிகு ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் ரூ. 60 இலட்சம் செலவில் சென்னை மாநகராட்சி வாங்கியுள்ள நவீன குப்பை இறுக்கி ஊர்திகளை (Compactors) இயக்கி வைத்தார்.

*(11-1-1990)*

சென்னைப் பெருநகர் பள்ளிப்பட்டு பகுதியில் குடிநீர்த் தேக்கத் தொட்டியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் தொடங்கி வைத்தார்.

*(24-1-1990)*








# டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுச் சிறப்பு அஞ்சல்தலை வெளியீடு

டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் நினைவுச் சிறப்பு அஞ்சல் தலை வெளியீட்டு விழா 17.1.1990 அன்று சென்னை மியூசிக் அகாடமியில் நடைபெற்றது.

மாண்புமிகு மத்திய அரசு தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு. கே.பி. உன்னிகிருஷ்ணன் அவர்கள் சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

தமிழ்நாடு அஞ்சல்துறைத் தலைவர் திரு. வி.எஸ். வரதன் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

''ஆளுநர் ஆட்சிக் காலத்தில் இந்த அஞ்சல் தலை வெளியிட ஒரு குழு அமைக்கப்பட்டது என்றாலும், தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் புதிய அரசு அமைந்த பிறகே அதன் பணிகள் முடுக்கி விடப்பட்டன; அதன் பலனாக இப்போது இந்த அஞ்சல்தலை வெளியிடப்படுகிறது. அரசியலில் எத்தனையோ வேறுபாடுகள் இருந்தாலும்-எம்.ஜி.ஆர் பெயரால் மருத்துவப் பல்கலைக் கழகம்; நினைவிடத்தை முழுமைப்படுத்தல்; அவர் சிலை வைக்க அனுமதி என்றெல்லாம் பெருந்தன்மையோடு நடந்துகொள்ளும் பெருமை நமது முதல்வர் அவர்களுடையது. எம்.ஜி.ஆர் பிறந்த நாளான இன்று, நமது முதல்வர் அவர்களின் பெருமுயற்சியால் டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவாகச் சிறப்பு அஞ்சல் தலை வெளியிடுவது மிகவும் பொருத்தமானது ஆகும்.''

சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டு மாண்புமிகு மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு. கே.பி. உன்னி கிருஷ்ணன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''என்னுடைய துறைக்கு உட்பட்ட அலுவலகக் கட்டடங்களுக்கு, நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றோர் முதலாகப் பல துறை வல்லுநர்களின் பெயர்களையும் சூட்டும்படி ஆணையிட்டிருக்கிறேன். அதன்படி வடமாநிலங்களில் உள்ள கட்டடங்களுக்குத் தென் மாநிலத்தார் பெயர்களும்-தென் மாநிலங்களில் அமையும் கட்டடங்களுக்கு வட மாநிலத்தாரின் பெயர்களும் வைக்கப்படும். தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு வளர இது ஒரு சிறந்த வழியாகும். மகாராட்டிர மாநிலத்தில் இருக்கும் ஒரு தொலைபேசி இணைப்பகத்திற்கு, தமிழ் நாட்டைச் சேர்ந்த மறைந்த விடுதலை வீரர் சத்தியமூர்த்தியின் பெயர் சூட்டப்படவிருக்கிறது. அதேபோல - இங்கு அம்பேத்கார், திலகர் போன்றவர்களின் பெயர்கள் சூட்டப்படும்.

''நான் எனது மாணவப் பருவத்தில், எம்.ஜி.ஆர். நடித்த பல திரைப் படங்களைப் பார்த்திருக்கிறேன். அவர், திரையில் மட்டுமல்லாமல், திரைக்கு வெளியிலும் சிறந்த நட்சத்திரமாகத் திகழ்ந்தார். தமது தாயாரின் பேரில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த அவர், மூகாம்பிகை பக்தராகவும், நாட்டின் ஒருமைப்பாட்டில் உறுதி கொண்டவராகவும் இருந்தார். அவர் உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிடுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.''

-அஞ்சல் தலையைப் பெற்றுக் கொண்டு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

''தேசிய முன்னணிக்கே தொடக்க விழா நடத்தியது சென்னை மாநகரம் என்ற உரிமையோடு, இன்று இந்தியாவில் நடைபெறுகின்ற நம்முடைய தேசிய முன்னணி ஆட்சியின் சார்பில் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய அஞ்சல் தலை வெளியிடுகின்ற இந்த விழாவிலே கலந்து கொள்வதை நான் மிகுந்த பெருமையாகக் கருதுகிறேன்.

ஒரு அரசுக்கு உரிய கடமையைச் செய்கிறோம் என்றாலுங்கூட, தனிப்

பட்ட முறையிலே எனக்கும் எம்.ஜி. ஆருக்கும் இருந்த நட்புணர்வை என்னையும் அவரையும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள்தான் - தெரிந்திருக்க முடியும். புரிந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்தவர்கள், தொலைவிலே இருந்தவர்கள், செய்திகளை மாத்திரம் மேடைகளிலே கேட்டறிந்தவர்கள், ஏடுகளிலே படித்தறிந்தவர்கள் அதைப் புரிந்து கொள்ள இயலாது. உண்மையிலேயே அந்த நட்பை உணர்ந்தவன், அதற்கு மதிப்பளிப்பவன் என்ற காரணத்தினாலேயே தான்-அவர் உயிரோடு இருந்த காலத்திலே அறிவிக்கப்பட்டு - ஆனால் தொடர முடியாத ஒரு முயற்சியாக இருந்த டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம் இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் அவர்களை அழைத்து அதற்கான திறப்பு விழா நடத்தி இன்றைக்கு அந்தப் பல்கலைக்கழகம் பல கோடி ரூபாய்ச் செலவில் அமைவதற்கான முயற்சியிலே இந்த அரசுதான் ஈடுபட்டிருக்கின்றது.

''அதைப்போலக் குடியரசு தலைவர் கலந்துகொண்ட அகில இந்தியக் கலைத்துறை நிகழ்ச்சி ஒன்றில், இனிமேல் தமிழ்நாட்டில் கலைத்துறையிலே பரிசு பெறுபவர்களுக்கு அளிக்கப்படும் பரிசுகளில்-கலைவாணர் பெயராலும், டைரக்டர் ராஜா சாண்டோ பெயராலும் சிறப்பு விருதுகள் வழங்கியதோடு-எம்.ஜி.ஆர் விருது என்ற ஒரு விருதும் வழங்கப்படும் என்று நான் முன்பு அறிவித்தேன். அந்த விருதினை நண்பர் ரஜினிகாந்த் அவர்கள் இந்த ஆண்டு பெற்றிருக்கிறார்கள் என்பதனையும் நான் சொல்லத் தேவையில்லை. அறிவித்ததோடு நின்றுவிடவில்லை. அது அமுலுக்கும் வந்தது என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேன்.

''அதுபோல எம்.ஜி.ஆர் மறைந்த பிறகு நினைக்கப்படாமலே கிடந்த நினைவிடத்தை ஏறத்தாழ நாற்பது இலட்சம் ரூபாய் செலவிலே கட்டி முடித்து, அதனுடைய தொடக்க விழா நிகழ்ச்சியிலும் நானே முன்னின்று உரையாற்றினேன் என்பதையும் நீங்கள் நன்கறிவீர்கள்.

நான் அந்த நிகழ்ச்சியிலே பேசும்போது-நானும், எம்.ஜி.ஆரும் நண்பர்களாக இருந்த காலத்திலும், நாங்கள் அரசியலிலே வேறுபட்டிருந்த காலத்திலும் அவரைப்பற்றி நான் சொன்ன கருத்துக்களை எல்லாம் அந்த நினைவிட விழாவில் எடுத்துச் சொன்னேன். இன்றைக்கு அதற்கு மாறாக-அவர் என்னைப் பற்றிச் சொன்ன கருத்துக்களை இந்த விழாவிலே சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

''அரசியலிலே மாறுபாடுகள் இருந்தாலுங்கூட, அரசியல் பண்பாட்டோடு அரசியல் நாகரீகத்தோடு நாங்கள் எல்லாம் அண்ணாவின் பள்ளியிலே பயின்றவர்கள் என்கின்ற அரசியல் பரந்த மனப்பான்மையோடு நடத்தப்பட்ட அந்தக் காரியங்களை உங்களிடம் தொகுத்துச் சொல்கிறேன்.




சிறப்பு அஞ்சல்தலை

''தமிழகத்தின் முதலவர் என்னும் முறையில் நல்ல நிர்வாகத் திறமையோடு கட்சிப் பாகுபாடு இல்லாமல் அரசாங்கத்தை நடத்திச் செல்கிறார் கலைஞர்-'' இது எம்.ஜி.ஆர். '71-ஆம் ஆண்டு பரங்கிமலை விழாவிலே குறிப்பிட்டதாகும். அவர் சொன்னது உண்மையா அல்லவா என்று இன்று நடைபெறுகின்ற இந்த விழாவிலிருந்தே நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

''நிர்வாகத் திறமையோடு கட்சிப் பாகுபாடு இல்லாமல் அரசாங்கத்தை நடத்திச் செல்கிறோம்'' என்று அவர் அன்று சொன்ன அந்த வாசகத்தின்- அடிப்படையிலேதான் தொடர்ந்து இந்த அரசு இயங்கி வருகின்றது.

அவர் அந்த விழாவிலேதான் மேலும் ஒன்றைக் குறிப்பிட்டார். அப்போது எனக்கும் அவருக்கும் நட்பு ஏற்பட்டு இருபதாண்டுக் காலமாகியிருந்த நேரம். அதனால் 71-ஆம் ஆண்டு அவர் பேசும்போது''தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் எனக்கும் இருபதாண்டுக் கால தொடர்பு உண்டு. அப்போது நான் கோவையிலே இருந்தேன். ஊருக்குள் பிளேக் என்ற நோய் பரவிக் கொண்டிருந்த காரணத்தால், குடும்பத்தை ஊருக்கு அனுப்பிவிட்டு கலைஞர் என் வீட்டில் வந்து தங்கினார். என் வீடு என்றால், அப்போது பன்னிரண்டு ரூபாய் வாடகை. இரண்டு பேரும் ஒன்றாக இருந்தோம். ஆனால் அவர் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவராகவும், நான் காங்கிரஸ்காரனாகவும் இருந்தேன். அப்பொது எல்லாம், அவரை என் பக்கம் இழுக்க முயற்சித்தேன். ஆனால் நிலைமை தலைகீழாக ஆனது. நான் அவர் பக்கம் ஈர்க்கப்பட்டேன். இன்று அவர் கழகத்தின் தலைவராகவும், நான் கழகத்தின் பொருளாளராகவும் இருக்கும் நிலைமைக்கு அந்த ஈர்ப்பு நடைபெற்றது'' என்று அன்றைக்கு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதைப்போலவே அவர் 'பாரத்' பட்டம் பெற்றபோது, 28-7-'72-இல் நடைபெற்ற பாராட்டு விழாவில் எம்.ஜி.ஆர். பேசும்போது-''நான்

## அதிமதுரச் சொல்லுடைய அண்ணா!

திருவாளர் சி.என். அண்ணாதுரை அவர்களை அறியாத தமிழர் இரார். தென் நாட்டில் அவரைத் தெரியாதார் யாரும் இரார். இவர் ஆங்கிலத்தில் பண்டிதர். பட்டத்தால் மட்டும் பண்டிதராய்த்திரிபவர் பலர் உளர், எனில் எழுத்திலும் பேச்சிலும் பழுத்த மொழியாட்சியிலும் திறனுடையோர் மிகச்சிலரே. அத்தகைய நல்ல நடை வல்லவர்தம் வரிசையிலே முன் அணியில் இடம் உடையவர் இவர்.

தமிழினிலோ அமிழ்துமிழும் சொல் வளமும் உணர்வெழுப்பும் தொடர்ச்சிச் செறிவும் குரவனிடம் கல்லாமல் தான், பயின்று திறம்பெற்ற சொல்லின் செல்வர், தமிழ் இளைஞர், 'புத்துலகு விரைந்து தொழில் கேட்க நிரந்தினிது சொல்லுதல் வல்ல நாவலர்.

அதிமதுரச் சொல்லுடையார்; தளராத உள உரனும் வளரறிவும் வளமலியும் தன்னுடைமை யாகக் கொண்டோர்.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

முதன் முதலாகப் பெற்ற பட்டம் புரட்சி நடிகர் பட்டம். அந்தப் பட்டத்தை எனக்கு முதன்முதலாகத் தந்து பாராட்டியவர் இன்றைய கழகத் தலைவரும், தமிழக முதல்வராகவும் இருக்கும் கலைஞர் அவர்கள்'' என்று குறிப்பிட்டார். எனவே அவருக்குப் பட்டம் அளிப்பது-அவரைப் பாராட்டுவது என்பதெல்லாம் இன்று ஏதோ அரசியல் மாற்றங்களின் அடிப்படையிலே நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சி அல்ல என்பதையும், எனக்கும் அவருக்கும் இருந்த அந்த நெருங்கிய தொடர்பு எத்தனையோ அரசியல் கருத்து வேறுபாடுகளால் என்றைக்கும் அகன்றதில்லை என்பதையும் உங்களுக்குச் சுட்டிக்காட்டத்தான் இவைகளைக் குறிப்பிட்டேன். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அஞ்சல் தலை இந்த விழாவிலே வெளியிடப்பட்டிருக்கின்றது.

''இங்கே பேசிய மத்திய அமைச்சர் அவர்கள்-வட பகுதியிலே உள்ள தலைவர்களைத் தென் பகுதியிலே உள்ளவர்கள் மதிப்பதும், தென் பகுதியிலே உள்ள தலைவர்களை வட பகுதியிலே உள்ளவர்கள் மதிப்பதும் இயல்பான ஒன்றாக ஆக வேண்டுமென்று-குறிப்பிட்டார்கள்.

''தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வடநாட்டிலே பிறந்ததலைவர்களுக்குப் பெருமை அளிக்க, மதிப்பளிக்க, அவர்களுடைய பெயர்களுக்கு விளம்பரம் தர என்றைக்குமே நாம் தயங்கியதில்லை. தமிழன் அதற்குத் தயங்க மாட்டான். ஆனால் வடக்கே உள்ள பகுதிகளில் தென்னாட்டவரை மதிக்கின்ற நிலை இது வரையிலே இருந்ததில்லை!

இந்தியாவின் ஒருமைப்பாட்டை நாம் உண்மையிலேயே போற்றுகிறோம் என்றால், உண்மையிலேயே கடைப்பிடிக்க வேண்டுமென்றால்-இந்தச் சாதாரண விஷயத்திில்கூட அங்கிருப்பவர்கள் அலட்சியம் காட்டக்கூடாது.

''பெரியாரைப் பற்றி மத்திய அமைச்சர் இங்கே குறிப்பிட்டார். அண்ணாவைப் பற்றிக் குறிப்பிட்டார். இந்தப் பெயர்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்குத் தெரிந்திட வேண்டும். அம்பேத்காரைப் பற்றிச் சொன்னார். அம்பேத்கார் பிறந்தது மராட்டிய மாநிலம். இன்னமும் மராட்டிய மாநிலத்திலே அம்பேத்கார் பெயரால் ஒரு பெரிய நினைவுச் சின்னம் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் கழக அரசு கடந்த காலத்தில் அம்பேத்கார் பெயரால் முதன் முதலாக இந்தியாவிலே கல்லூரி ஒன்றை அமைத்ததை யாரும் மறந்திருக்க முடியாது. அதைப் போலவே இந்தியாவிலே எங்குமில்லாத அளவிற்கு அம்பேத்கார் சிலையைத் தமிழ்நாட்டிலே காணலாம். அதைப் போலவே இந்தியாவிலே எங்குமில்லா அம்பேத்கார் மாவட்டத்தை, இந்த அரசுதான் உருவாக்கி-வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்திருக்கின்றது. அதைப் போல அண்ணா பெயரால்-பெரியார் பெயரால் வட்புலத்திலே உள்ள மாநிலங்களில் டெல்லி போன்ற நகரங்களிலே நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட வேண்டும். அதற்கு பிறகுதான் தேசியம் என்பதிலும்-ஒருமைப்பாடு என்பதிலும் எல்லோருக்கும் நம்பிக்கை ஏற்பட முடியுமேயல்லாமல் ஒருமைப்பாடு என்பது மற்றவர்களை ஏமாற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு வலையாக இருத்தல் ஆகாது.''

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவாகள் பேசினார்.

விழாவில்-மாண்புமிகு அமைச்சர்கள் திரு. பொன். முத்துராமலிங்கம், திரு. எஸ். துரைமுருகன், மாண்புமிகு முதல்வரின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. துரைசாமி ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

செய்தித்துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம் இ.ஆ.ப. முன்னுரையோடு தொடங்கிய விழா முடிவில்-செய்தி சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., நன்றி உரையாற்றினார்.


# பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு டவுன் பாங்க் லிமிடெட் எண்-3

**90-91, நெல்லுக்காரத் தெரு, காஞ்சிபுரம்**

தொலைபேசி : 2340

★ இந்தியாவில் துவக்கப்பட்ட முதல் கூட்டுறவு நகர வங்கி
★ மொத்த டிபாசிட்டுகள் இருப்பு ரூ.11 கோடிக்கு மேல்.
★ மொத்தக் கடன்கள் நிலுவை ரூ.8 கோடிக்கு மேல்.
★ 1979-80 & 1984-85-ஆம் ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படும் கூட்டுறவு நகர வங்கி என்ற சிறப்புக் கேடயம் பெற்ற வங்கி.
★ காஞ்சியில் 3 கிளைகள் சேவை செய்கின்றன.

## சிறப்பு அம்சங்கள்

(1) இதர வங்கிகளை விட கூடுதலாக டிபாசிட்டுகளுக்கு 1% வட்டி உண்டு.
(2) டிபாசிட்டுக்கு உயர்ந்தபட்சம் வட்டி 11% உண்டு.
(3) சிறுதொழில், குடிசைத் தொழில் மற்றும் சுயமாக வேலை செய்யக் கடன்கள், புதிய பஸ், லாரி வாங்க கடன்கள் உண்டு.
(4) டிபாசிட்டர்களுக்கு ரூ.30,000/- வரை இன்சூரன்ஸ் பாதுகாப்பு உண்டு.
(5) பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

எஸ். மணிமுடி, பி.ஏ. எச்.டி.சி.,
செயலாளர்

வி.எம். இராதாகிருஷ்ணன்
துணைப் பதிவாளர்/தனி அலுவலர்



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு, செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002

அதி / நவீன / பட்டு / வகைகள்



உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

# கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

Licence No. TN/MS(C)/PP-23





